# இரத்தோட்டை அருள்மிகு
# ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்



## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

# சிறப்பு மலர்

18.03.2013

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
மஹா கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

# K.பெஷன்

புடவை வியாபார நிலையம்

இந்தியாவிலிருந்து தருவிக்கப் பெற்ற
இந்தியத் திருமண கூறைசேலைகள், நவீன பட்டுச் சேலைகள்,
மும்பாயில் இருந்து இறக்குமதி செய்த சுரிதார்கள்,
சோலிகள் இன்னும் விஷேட வைபவங்களுக்குத் தேவையான
ஓடர்களும் ஏற்று உடனடியாகத் தரப்படும்.





இச்சலுகை அனைத்திற்கும் நாட
வேண்டிய ஒரே இடம்

# கே.பெஷன்





இல: 720, திருகோணமலை வீதி,
மந்தண்டாவளை,
மாத்தளை.
தொ.பே: 066 222 4185, 072 3350 255
077 5125 950

அருள்மிகு

# ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்

## இரத்தோட்டை



**திருக்கோயில் ஜீர்ணோத்தாரண**
**அஷ்ட பந்தன**
**நவகுண்ட பக்ஷ நூதன பிரதிஷ்டா**
**மகா கும்பாபிஷேகப்**

# பெருஞ் சாந்தி பெருவிழா
# சிறப்பு மலர்

**18.03.2013**

# சமர்ப்பணம்

**கஜானனம் பூதகண நாதசேவிதம்**
**லம்போதரம்**
**பக்தஜன ரஷகம்**
**கும்பாபிஷேக சித்தியர்த்தம்**
**விநாயகம் நமாம்யகம்**

**ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானது**
**பாதார விந்தங்களில்**
**இம்மலரைச்**
**சமர்ப்பிக்கின்றோம்!**

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"
"சமயப்பணியும் ஒரு சமூகப்பணியே உணர்வோம் உயர்வோம்"




## சர்வ சாதகம் - "வேத ஆகம வித்யா பூஷணம்"
## பிரம்ம ஸ்ரீ விஸ்வ நாராயண குருக்கள் (தெல்லிப்பளை) அவர்களின்
# ஆசிச்செய்தி

அகார உகார மகார அஷ்ரங்களின் சேர்க்கை ஓங்காரமாக அமைவதால் ஞானமுதல்வனாக பேசப்படுபவர் ஸ்ரீ செல்வ விநாயகர். பிரணவ சொரூபியான பிள்ளையார் அன்புடன் வழங்கப்படுகின்றார். வழிபாட்டு முறையில் மிக இலகுவான தனித் தெய்வம் எல்லா விழாக்களிலும் முதல் பூஜை பெறுபவர். அடியார் விரும்பிய இடமெல்லாம் ஆற்றங்கரை, அரச மரம், பெரு வீதி ஓரங்களில் வழித்துணை விநாயகர். சைவ ஆகம ரீதியாக முறையே மிஸ்ரம், சங்கீர்ண ஆலயங்களென விநாயகப் பெருமான் பற்பல காரணப் பெயர்களோடு (அரசடி விநாயகர், செல்வ விநாயகர், வரசித்தி விநாயகர், வித்தியா கணபதி, மங்கள கணபதி) பக்தர்களின் வேண்டுதலை நிறைவு செய்கிறார்.

இவ்வகையில் ஸ்ரீமத் இலங்காபுரியின் மத்தியில் மகாவலி வளம் சேர்த்து மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை எனும் பதியில் ஆன்மாக்கள் உய்ய வேண்டி "செல்வ விநாயகர்" எனும் நாமம் பூண்ட பூரணமான திருக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாலய மகா கும்பாபிஷேகம் அடியார்கள், தனவந்தர்களின் உதவியுடன் அறங்காவலர்களால் 18.03. 2013ல் நடைபெறுகிறது.

ஸ்ரீ செல்வ விநாயக திருவருளால் நிறைவாக நடைபெறும் மகாகும்பாபிஷேக விழாவினை எப்போதும் தப்பாது விநாயக திருமேனி தீண்டும் "கணேசானுபூதி" "சிவாகம பிரவீண" சிவஸ்ரீ கு.குகேஸவர குருக்கள் தலைமை தாங்கி நடாத்த நம் நாட்டின் புகழ் பூத்த பல சிவாச்சாரிய பெருமக்களின் அனுசரணையுடனும் அறங்காவலர்களின் குறைவில்லாத திரவியங்களுடனும் பக்த கோடிகளின் நிறைந்த பக்தியுடனும் நடைபெறுவதால் விழா பூரணமானதாக சிறக்கும் என்பது திண்ணம்.

இவ்விழாவினையொட்டி மலரும் கும்பாபிஷேக சிறப்பு மலர் அருள் மணம் நிரம்பியதாக மலரவும், குடமுழுக்கு பெருவிழா சிறக்கவும், விநாயகர் அடிபணிந்து ஆசி வழங்குகின்றேன்.

திருவருட் பெருவிழாவினை காண பெரு விருப்புடன் வருகைத் தரும் அடியார் பெருங்கூட்டம் ஸ்ரீ செல்வ விநாயகர் அருளால் பதினாறு செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

"சுபமஸ்த்து"



உ



## கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குருவின்
## ஆசிச்செய்தி

அழகிய வளங்கள் பல கொண்டு அருளாளர்கள், அறிவாளர்கள் மற்றும் பல பாடல்பெற்ற அருள் ஸ்தலங்களையும் கொண்டு மலை, மழை வளமும் கொண்ட தீவாக விளங்கும் இலங்கைத் தாய்திருநாட்டின் மத்திய பிரதேசமாம் மாத்தளை மாநகரருகே இரத்தோட்டை என்னும் நகரிலே பக்திமான்களுடைய பக்திப் பெருக்கினால் பல காலங்களுக்கு முன்னே ஸ்ரீ செல்வ விநாயகர் என்னும் நாமஞ் சூட்டி கோயில் உருவாக்கப்பட்டது.

எதிர்காலச் சந்ததியினர் சைவநெறி மாறாது வாழ்வதற்காக தீர்க்க தரிசனத்துடன் ஸ்தாபித்த செல்வ விநாயகப் பெருமான் கருணைக் கடலாக, கண் கண்ட தெய்வமாக அரும்பெருஞ் சோதியாக, தனிப்பெரும் கடலாகத் திகழ்ந்து கருணை மழை பொழியும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கு இந்து வாழ் பக்தர்களின் பக்தியினாலும் கொடை வள்ளல்களாலும் இலங்கைத் திருநாட்டின் நாற்புறமும் வாழும் பக்த அடியார்களின் கோணாத கொடையாலும் அறநெறி தவறாது நடாத்திவருவது சிறப்பம்சமாகும்.

ஆலய நிர்வாக சபையினராலும் எம்பெருமானின் ஆலயத்தில் பக்தி மயமான சிற்பங்களும், கலை வர்ணம் கொண்ட பலவர்ணங்களாலும் மிகச் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு 18.03.2013 பங்குனி திங்கள் அன்று மகா கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி விழா நடைபெறவுள்ளது. தங்கள் நலம் பாராது இப்பெரும் கைங்கரியத்தில் ஈடுபடுத்திக் கொண்ட அனைத்து அடியவர்க்கும், வழிபடுவோர்க்கும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பேரருளும், சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ குருமாரின் நல்லாசியுடனும் எனது மனம் நிறைந்த நல்லாசிகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

"சுபம்"

சிவஸ்ரீ. கு. குகேஸ்வர குருக்கள் (ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - நீர்கொழும்பு)
அலங்கார ஆகம வீபூஷணன்,
ஸ்ரீ சாக்த கிரியாரத்னா,
சிவாகம கிரியா பூஷணம்,
சிவாகம கிரியா ஜோதி

உ

ஓம் கணேசபநய



## இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. வரதசாரங்க குருக்களின்

# ஆசியுரை

இலங்கைத் திருநாட்டில் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை என்னும் நகரின் மத்தியில் அமைந்த ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் 18.03.2013 திங்கட்கிழமை நடைபெறுகிறது.


திருக்கோவிலை ஆகம முறைப்படி அமைத்து விநாயகப் பெருமானின் திருவருள் பிரகாசம் நிறைய செய்யும் விழா மகா கும்பாபிஷேகம் ஆகும்.

முறைப்படி செய்யும் கும்பாபிஷேகம் மூலம் ஆலயங்களில் மூர்த்திகள் தெய்வீகம் மிகுந்தப்பட்டு அருட்சக்தி பொங்கி பிரகாசிக்கும். விதிப்படி ஆவாகனம் செய்யப்பட்ட கும்பத்தை குறித்த சுபமுகூர்தத்தில் ஸ்ரீ செல்வ விநாயகருக்கு அபிஷேகம் செய்வதனால் மகா கும்பாபிஷேக பிரதிபலன் உண்டாகும்.

இத்தனை பெருமை வாய்ந்த கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தி வைக்கும் சிவாச்சாரிகளுக்கும், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும், இரத்தோட்டை வாழ் இந்துக்களுக்கும் புண்ணிய கைங்கரியத்தில் தொண்டாற்றிய அன்பர்களுக்கும் கும்பாபிஷேகத்தில் பங்குபற்றிய பெரு மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ எனது வாழ்த்துக்கள்.

இக்கும்பாபிஷேகத்தையொட்டி மலரும் இம்மலரானது அருள் மணம் வீசும் தெய்வ மலராக மலர்ந்து விரிவதற்கு விக்கினங்களைத் தீர்க்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பாதங்களைப் போற்றி, துதித்து எனது நல்லாசிகளை நல்கிறேன்.

"லோகா சமஸ்தா சுகிநோ பவந்து"



சுபமஸ்த்து

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# ஆசியுரை

இரத்தோட்டை, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழா எதிர் வரும் 18.03.2013 திங்கட்கிழமை அன்று நடைபெற திருவருள் கூடி இருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

"கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை - இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான். ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவது உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்: அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்: அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்."

"மனத்தின் உள்ளே குடிகொண்டிருக்கும் தெய்வத்தன்மையை வெளிக்கொண்டுவருவது தான் முடிவான இலட்சியமாகும். இதைக் கர்மயோகம், கடவுள் வழிபாடு, மனக்கட்டுப்பாடு, தத்துவ விசாரம் என்னும் இவற்றுள் ஒன்றினாலோ, பலவற்னாலோ, எல்லாவற்றினாலோ செய்து சாதித்துச் சுதந்திரமாய் இரு." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். இக்கருத்துக்களை அனைவரும் இந் நன்னாளில் மனத்தில் பதித்து சிறந்த முறையில் வாழ ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானை வேண்டுவதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

மேற்படி மகா கும்பாபிஷேகமும், மலர் வெளியீடும் சீரும் சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகரின் அருளையும், ஆசியையும் வேண்டுகிறேன்.


12.02.2013

இறைபணியில்,

சுவாமி சர்வரூபானந்த

(சுவாமி சர்வரூபானந்த)
*தலைவர்*

உ



இரத்தோட்டை
ஸ்ரீ செல்வ விநாயகர் பேரில்

## ஆசிரிய விருத்தம்

சீர் தங்கு பனி படரும் மலைகளுக்குச் சேலையுந்
திருமருவு கின்ற தாகச்
செய்றப்பர் தேயிலைகள் வாசனா திகள் கொக்கோ
சேரும் மாத்தளைக் கண்மையாய்
ஏர்தங்கு ரத்தோட்டை வாழ்கின்ற ஐயனே
எமது துயர் களைய வேண்டும்
ஏரம்ப னேநல்ல மூர்தியே மூலமாய்
எழுந்தருளும் வள்ள லேநீ
ஓர்கொம்பு மிருபதமும் மும்மதமும் நால்வாயும்
ஒளிரவே ஐந்து கரமும்
உள்ளநீ வாழ்வருள வல்லையோ இதுவேளை
உன்னையே தஞ்ச மென்போம்
கார்தங்க வளமருளுஞ் ஸ்ரீ செல்வ விநாயகா
காத்தருள வேண்டு மையா
காணவே குடமுழுக் கேற்றிடும் நாதனே
கருணா கரக்க டவுளே.

கவிமணி வே. செல்வநாயகம்
மூலம்: இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலின் 1972 ம் ஆண்டுக்கான கும்பாபிஷேக மலர்

# குருமார் விபரம்

**பிரதம குரு :-** பிரதிஷ்டா பிரதம குரு ஆகமப் பிரவீணர், சிவாச்சாரியமணி வேதாகம ஞானஜோதி கு.குகேஸ்வரக் குருக்கள்.
(ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - நீர்கொழும்பு.)

**சர்வ சாதகம் :-** வேத ஆக வித்யா பூஷணம் சிவஸ்ரீ. விஸ்வநாராயண குருக்கள் (தெல்லிப்பளை)

**சர்வ போதகம் :-** "கிரியாகால வேத ஆகம விற்பன்னர்" சிவஸ்ரீ. S. சிவானந்த குருக்கள் - (ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் - மாத்தளை.)

**சாதகம் :-** "ஸ்ரீ வேத ஜோதி" சிவஸ்ரீ. பால கணேஷகுருக்கள்,
(ஸ்ரீ நாகபூசனி அம்பாள் தேவஸ்தானம் நயினைத்தீவு யாழ்ப்பாணம்)

**ஆலய குரு :-** சிவஸ்ரீ. வ.சாரங்க குருக்கள் -
(ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் - இரத்தோட்டை.)


சிவஸ்ரீ. S. கிருஷ்ணாந்த குருக்கள் -
(ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் திருக்கோயில் - சுது கங்கை மாத்தளை.)
சிவஸ்ரீ. பூர்ண சந்திரகாந்த குருக்கள் -
(ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில் - ஹட்டன்)
சிவஸ்ரீ. R. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் -
(ஸ்ரீ சிவன் ஆலயம் - காலி.)
சிவஸ்ரீ. பா.பாலகுகேஸ்வரன் குருக்கள் -
(ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயம் - பண்டாரவளை.)
சிவஸ்ரீ. R. முரளிதர குருக்கள் -
(ஸ்ரீ சிவன் கோயில் - சிலாபம்.)
சிவஸ்ரீ. இராம கந்தராஜ குருக்கள் -
(கந்தசாமி கோயில் இணுவில் யாழ்ப்பாணம்.)
சிவஸ்ரீ. S. உமாரமண குருக்கள் -
(கதிரமலை சிவன் கோயில் சுன்னாகம் - யாழ்ப்பாணம்.)
சிவஸ்ரீ. ராஜாராம் ரவி குருக்கள் - ஹட்டன்.

**யாக சம்ராஷ்சகர்**

பிரம்மஸ்ரீ. K. கஜன் சர்மா (சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ. T. பிரணவ சர்மா (சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ. கணேசராஜ சர்மா (சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ. R. விருபாஷசர்மா (இணுவில்)

**வேத பாராயணம்**

பிரம்மஸ்ரீ. S.பாலாஜி சர்மா
பிரம்மஸ்ரீ. K.வியாச சர்மா
பிரம்மஸ்ரீ. K.ரக்கீர சர்மா
பிரம்மஸ்ரீ. K.கோடிகைலாஸ் சர்மா
பிரம்மஸ்ரீ. S.ஜெகன் சர்மா



**மங்கள வாத்தியம்**

யாழ்ப்பாணம் இணுவையூர் க. சாந்தரூபன் குழுவினர்

Minister } 081 2385373
081 2387384

Mobile } 071 6875030

Fax } 081 2387384

Secretary } 081 2384173
081 4929446

Fax } 081 2387410

**ANUSHIA SIVARAJAH J.P.**
**MINISTER**

**Ministry of Industries, Sports, Women Affairs, Rural Development, Estate Infrastructure Development, Hindu Cultural, Youth Affairs and Education (Tamil)**

**CENTRAL PROVINCIAL COUNCIL**


My Ref Your Ref. Date

# வாழ்த்துச் செய்தி

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க தாங்கள் குடியேறி வாழும் இடங்களில் எல்லாம் கோயில் கட்டி கோபுரம் எழுப்பி சமயச் சடங்குகளை ஆசார முறைப்படி நிறைவேற்றி குடமுழுக்கு விழா எடுத்து இறைநெறியை என்றென்றும் பின்பற்றி நின்று வாழ்ந்து வருபவர்கள் இந்துக்கள்

எந்த விடயத்தை தொடங்கினாலும் முதலில் விநாயகரை வணங்குவது வழக்கம். வல்வினைகளைத் தீர்க்கும் விநாயகனுக்கு எழில் கொஞ்சும் மலையகத்தின் பண்ணாகம் எனும் பெயரில் அழைக்கப்பட்டு வந்த மத்தளை மாநகரில் இறத்தோட்டையில் அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற அருள் கிட்டியிருப்பதையிட்டும் அதன்பொருட்டு வெளிவரும் மலருக்கு ஆசிச்செய்தி அனுப்புவதையிட்டும் முதற்கண் அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகருக்கு எனது நமஸ்காரங்கள்.

குடமுழுக்கு விழாவிற்குப் பயன்படுத்தப்படும் நீர் தங்களது அங்கங்களில் படுவதால் தெய்வீகம் மிகுந்த புனிதத்தன்மையை பக்தர்கள் பெறுவதாகத் தொன்று தொட்டு நம்பப்பட்டு வரும் விடயமாகும்.

எனவே இப்பாரிய கைங்காரியத்தை மிகவும் பொறுப்புடன் எடுத்துக் கொண்டு வெற்றிகரமாகச் செய்து வரும் ஆலய பரிபாலன சபையினருக்கு அவர்களோடு சகல வழிகளிலும் உறுதுணையாகவிருந்து செயற்படும் அனைவருக்கும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டாளர்களுக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

திருக்கும்பாபிஷேகம் விநாயகர் அருளால் நிறைவேறவும் மலர் மணக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

அனுஷியா சிவராஜா

அமைச்சர்

அனுஷியா சிவராஜா ஜே.பி.
அமைச்சர்
கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார,
கிராமிய அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி,
இந்து கலாசார,
இளைஞர் விவகார, மற்றும் (தமிழ்) கல்வி அமைச்சு
மத்திய மாகாண சபை


P.O. Box 41, Getambe, Peradeniya.

# හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
# Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director | 2552643 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 2552825 | ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail | info@hindudept.gov.lk |
| පොදු / பொது / General | 2552641 | | | වෙබ් අඩවිය / இணையதளம் / Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය / எனது இல. / My No. | | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 13.02.2013 |


## வாழ்த்துச் செய்தி

மாத்தளை மாவட்டம் இறத்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும் அதனையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆன்மாக்கள் இலயித்து நிற்கும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. அங்கு இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கின்றான். நமது சமய, கலை, கலாசார, பண்பாட்டின் உறைவிடமாகவும் ஆலயங்கள் விளங்குகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அந்த பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கும் இடமாகவும் காணப்படுகின்றன. சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இத்தகு ஆலயங்களை முறையாக பராமரித்து பேணிப்பாதுகாத்தல் மிக அவசியமாகும்.

அந்தவகையில் இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெறவும், அதனை நிறைவாக நடாத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், நல்ல முறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்

சாந்தி நாவுக்
பணிப்பாளர்
கலாசார அலுவல்
காலி வீதி,


248, 1/1, ගාලු පාර, කොළඹ - 4 | 248, 1/1, காலி வீதி, கொழும்பு - 4 | 248, 1/1, Galle Road, Colombo - 4

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

# ALL CEYLON HINDU CONGRESS

( Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
Chairman of the Board of Trustees
வி. கயிலாசபிள்ளை
V. Kailasapillai
T.P. 2575566 Fax. 2575472
E-mail hariomak@gmail.com

தலைவர் President
கந்தையா நீலகண்டன்
Kandiah Neelakandan
T.P. 2371100 (off) 2580807 (Res)
Fax. 2371111, 2371122
E-mail. neela@mnlaw.lk
Mob. 071-2723456

பொதுச் செயலாளர்
General Secretary
முத்தையா கதிர்காமநாதன்
Muthiah Kathirgamanathan
T.P. 2582139 (Res) Fax. 2361381
E-mail. mknathan21@yahoo.com
Mob. 077-7656070

பொருளாளர்
Treasurer
வே. கந்தசாமி
V. Kanthasamy
T.P. 2586620 (Res)
E-mail. vkandasami@gmail.com
Mob. 071-5349150

## அணிந்துரை

இலங்கைத் திருநாட்டின் குறிஞ்சி நிலமாகிய மாத்தளை மாவட்டத்திலுள்ள இரத்தோட்டை என்னும் ஊரில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆனை முகப் பெருமானுக்கு எதிர்வரும் நந்தன வருடம் பங்குனித்திங்கள் 5ம் நாள் (18.03.2013) நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரவிருக்கும் மலருக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடமாகும். எனவே ஊர்தோறும் ஆலயங்கள் நிறுவப்படல் வேண்டுமென்பதோடு அவை உரிய முறையில் பராமரிக்கப்படவும் வேண்டும். அத்துடன் ஆலயங்களைக் காலத்திற்குகாலம் புனரமைத்துக் குடமுழுக்கு நடாத்துவது இந்து மக்களாகிய எமது முக்கிய கடமைகளிலொன்றாகும். இதன்மூலம் எமது சந்ததியினரை ஆன்மீகப்பாதையில் இட்டுச் செல்லலாமென்பது அடியேனின் நம்பிக்கையாகும்.

மேலும் ஆலயங்களில் விழாக்கள் நடாத்துவதுடன் மட்டுப்படுத்தப்படாமல் அவை சமய மற்றும் சமூக சேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பல ஆலய நிர்வாக சபைகள் அங்கத்தவர்களாக இருக்கின்றன. இவற்றின் மூலம் நாம் சமய, சமூகப்பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். இவற்றில் ஒன்றாகப் பாடசாலை மட்டத்தில் பிள்ளைகளை சிவதொண்டர் அணிக்கு சேர்த்து கொள்கின்றோம். இவ் அணிக்கான அனுசரணைகளை இந்து மாமன்றம் வழங்கி வருகின்றது.

எனவே இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய பரிபாலனசபையினரும் இவ்வாறான சமய, சமூகப்பணிகளுக்கும் தமது நேரத்தை ஒதுக்க வேண்டுமென விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன். இதன்மூலம் எமது பிள்ளைகளை சமுதாயத்தில் நற்பிரசைகளாக்க முடியும் என்பது எமது நம்பிக்கை.

சுமார் 100 வருடகால பழமை வாய்ந்த இவ்வாலயத்தை தொன்றுதொட்டு பராமரித்து இன்று மகா கும்பாபிஷேகம் நடாத்த ஏற்பாடு செய்ததையிட்டு ஆலய பரிபாலன சபையினருக்கு மாமன்றத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

இறைபணியில்

கந்தையா நீலகண்டன்

தலைவர்.

தலைமையகம்: இல. 91/5 சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு - 02. இலங்கை
Head Office: No. 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo – 02, Sri Lanka
தொ.பேசி / Tel : 2434990 Website: www.hinducongress.lk E-mail: hinducongress@gmail.com தொ.நகல் / Fax: 2344720

भारत का सहायक उच्चायुक्त
ASSISTANT HIGH COMMISSIONER OF INDIA
कैंडी (श्री लंका)
Kandy (Sri Lanka)

31 Rajapihilla Mawatha
P.O. Box 47, Kandy (Sri Lanka)
Tel: +94 81 2234545
Fax: +94 81 2232479
E-mail: ahciknd@sltnet.lk

பெப்ரவரி 20, 2013

# வாழ்த்துச் செய்தி

இலங்கை மணித் தீவின் மத்தியில் அமைந்திருக்கும் எழில் கொஞ்சும் மலையகத்தில் சைவநெறி தலைத்தோங்கி நிற்கும் மாத்தளை மாநகரத்தின் இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறும் இத்தருணத்தில் மலையக மக்கள் இறை பக்தி உணர்வு மிக்கவர்களாகவும் தனது மொழி, இனம், மதம் மற்றும் கலை, கலாசாரம் சார்ந்த நிகழ்வுகளை பேணிப்பாதுகாத்து அதன் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருப்பவர்களாக திகழ்வதை பார்க்கும் போது, மனதுக்கு மிகவும்மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இவ்வேளையில் சகல காரியங்களிலும் சித்தியை தருவதில் முதன்மை பெற்றவனாக விளங்கும் செல்வ விநாயகனின் கும்பாபிஷேக விழாவின்போது சகலரும் சாந்தி சமாதானம் சௌபாக்கியம் பெற்று செல்வ செழிப்புடன் வாழ எல்லாம் வல்ல எம்பெருமானின் அருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றேன்!........


மஹா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற என் நல்வாழ்த்துக்கள்!......

நன்றி, வணக்கம்!

இங்ஙனம்

..........................

ஆ. நடராஜன்
உதவி இந்தியத் தூதுவர்
கண்டி.



## தலைவர் அவர்களின் வாழ்த்துரை...

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் பொற்பாதங்களை வேண்டி கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் தலைவர் என்ற வகையில் பெருமை அடைகின்றேன். இவ்வாலயத்தின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பெருமை சுமார் நூறு வருடங்களைக் கொண்டதாகும். இவ்வரலாற்று பெருமைமிக்க ஆலயத்தை ஆரம்பம் முதல் பராமரித்து நிர்வகித்த அத்தனை நிர்வாக சபை, தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களையும் இந்த நன்நாளிலே நன்றியோடு நினைவு கூறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1994ம் ஆண்டு இவ்வாலயத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டு இந்நாள் வரை சுமார் இருபது வருடங்கள் ஆலயப் பணியை அனைவரதும் ஒத்துழைப்போடும் மேற்கொள்வதற்கு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் கொடுத்த சந்தர்ப்பத்திற்கு நான் முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலய பணி என்பது ஒரு தலைவரினாலோ, அல்லது ஒரு நிர்வாக சபையினராலோ அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினராலோ செய்துமுடிக்க முடியாத காரியமாகும். எமது ஆலயத்தை பொறுத்தவரை அனைவரதும் ஒத்துழைப்பும் சரியாக கிடைத்த காரணத்தினால் தான் நாங்கள் இப்பாரிய பணியை நிறைவேற்றுவதற்கு இலகுவாக இருந்தது. அந்த வகையில் இப்பணியை சீராக முடிப்பதற்கு அனைத்து வகையிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய நல்ல உள்ளங்களே பெருமைக்குரியவர்கள்.

இன்று ஆலய பதவிகளை தனது புகழுக்கும் பெருமைக்கும் உரிய பதவிகளாக எண்ணி அதை துஷ்பிரயோகம் செய்து ஆலயத்தையே தனக்கு விலாசமாக வைத்துக்கொண்டு செயல்படுகின்றவர்களுக்கு மத்தியில் எமது ஆலய நிர்வாக சபை ஒற்றுமையோடும் உண்மையான ஈடுபாட்டோடும் எவ்விதமான எதிர்பார்ப்புகளுமின்றி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

1994ம் ஆண்டு முதன்முதலாக நவக்கிரஹ திருப்பணி ஆரம்பிக்கப்பட்டதோடு, சித்திரத்தேர் திருப்பணியும் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து ஆலய ராஜகோபுர திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு, வள்ளி தெய்வானை சமேத முருகன் ஆலயமும், மகாலஷ்மி ஆலயப் பணியும், கலாசார மண்டப முதற்கட்ட திருப்பணியும் இனிதே நிறைவேற்றப்பட்டு 2000ம் ஆண்டு கும்பாபிஷேக பெருவிழாவும் நடைபெற்றது.

இக்காலங்களில் ஆலய வளவுக்குள் இருந்த குடியிருப்பாளர்கள் ஒரு சிலருடன் சிறந்த நல்லெண்ண ஒப்பந்தத்துடனும், ஒருவரோடு பல வருடங்கள் வழக்குகள் பேசி அவர்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலைகளும் பல சிரமங்களுக்கு மத்தியில் ஆண்டவனின் அனுக்கிரகத்தால் இனிதே நிறைவேற்றப்பட்டன.

பின்பு 2004ம் ஆண்டு தொடக்கம் ஆலயம் முழுவதும் கொங்கிறிட் கூரை போடப்பட்டு அதனைத்தொடர்ந்து ஆலய மூலஸ்தானம், இரட்டை பஞ்சாங்க வேளையோடு 27 அடி விமானமும், மகத்தான வில் மண்டபமும், சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கை, தட்சணாமூர்த்தி, மகாவிஸ்ணு, ஆஞ்சநேயர், நவக்கிரகம், சண்டேஸ்வரர், சூரியன், சந்திரன், வைரவர் ஆகிய பரிவார ஆலயங்களும் வசந்த மண்டபமும், மணிக்கோபுரமும் அனைத்திற்கும் தேவையான சிற்ப வேலைகளும், பொம்மை வேலைகளும் சிற்பாசிரியர்களினால் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டன.

இறுதியாக அனைத்து வர்ணப்பூச்சு வேலைகளும், சிறப்பாக செய்து முடிக்கப்பட்டு, இவ்வாலயம் சிறப்பான முறையிலே புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 18.03.2013 அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இக்கும்பாபிஷேகத்தின் சிறப்பு நிகழ்வாக, இதற்கு முன்பு தலைவர்களாக பணியாற்றிய அனைத்து அன்புள்ளங்களையும் அழைத்து அவர்களை முன்னிருத்தி இக்கும்பாபிஷேக பெருவிழாவை நடாத்துவதில் எமது நிர்வாக சபை பெரும் மகிழ்ச்சிடைகின்றது.

எமது தலைமையில் அன்று தொடக்கம் இயங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் இன்று, எமது நிர்வாக சபையில் அங்கம் வகிக்காத அன்று துணிச்சலோடும், திறமையுடனும் பணியாற்றிய முன்னால் செயலாளர்கள் திரு.எஸ்.நடராஜா அவர்களையும், திரு.எஸ்.மயில்வாகனம் அவர்களையும் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

எமது பெரும் பணியான அறநெறிப் பாடசாலை பணி மந்தமாக நடைபெறுவதை எண்ணி சற்று மனதில் வருத்தம் கொள்கின்றேன். இங்கு சில கல்விசார் நிறுவனங்கள் எமது சமய பணிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்காததே இதற்கு முக்கிய காரணமாகும். இந்நிலை எதிர்காலத்திலே மாற்றியமைக்கப்படும். அத்தோடு அறநெறிப் பாடசாலை பணி சிறப்பாக தொடரும்.

இப்பணிகள் யாவும் சிறப்பாக அமைந்து இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு எல்லா வகையிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய செயலாளர், பொருளாளர், உப தலைவர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், இறத்தோட்டையைச் சேர்ந்த கொழும்பு வாழ் நல்ல உள்ளங்கள், அனைத்து இந்து மக்களுக்கும், இக்கும்பாபிஷேக விழாவை இனிதே சிறப்பாக நடாத்தி வைக்கின்ற சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வனைத்திற்கும் மேலாக இப்பணியை தனக்கு வேண்டிய வகையில் அமைத்து கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடாத்தி முடித்த எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கே அனைத்து புகழும், பெருமையும் கிட்ட வேண்டுமென வேண்டி நிற்கின்றேன். எதிர்காலத்திலே மேற்கொள்ளும் அனைத்து திருப்பணிகளுக்கும், தாங்கள் அனைவரினதும் மேலான ஒத்துழைப்பை நிர்வாக சபை நாடி நிற்கின்றது.

கா.கருப்பையா<br>
தலைவர்<br>
ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்<br>
இறத்தோட்டை

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*






## செயலாளர் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று எமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அதற்கிணங்க மலைவளமும், கனிவளமும் நிறைந்த மாத்தளை இரத்தோட்டை மாநகரில் எமது ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தை அமைத்த நமது முன்னோர்கள் தமது கடமைகளை சரிவரவும் பொறுப்பாகவும் நடாத்தி எனக்கும் பங்கேற்பதற்கு வாய்ப்பு கிடைத்ததை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் எனக்கு அருளிய பிறவிப் பயனாகவே கருதுகின்றேன். இந்த கும்பாபிஷேகத்துடன் இவ்வாலயம் திருக்கோயிலாக பெருமைக்கொள்ளும்.

இந்த திருக்கோயில் எழுந்தருளி இருக்கும் பெருமானின் அருளையும், மகிமையையும் அனைவரும் அறிந்ததே. அதற்கொரு உதாரணமாக 35 ஆண்டுகளுக்கு முன்பதாக பூஜை நேரத்தில் இவ்வாலயத்தில் முன்புறம் மாட்டப்பட்டிருந்த மின்விளக்கு ஆடிக்கொண்டிருந்தது என்பது யாவரும் அறிந்த உண்மையே!

மேலும் இந்த பணியில் முன்னோக்கி செல்வதற்கு ஒத்துழைப்பு தந்தவர்களுக்கும், எல்லோருக்கும் ஊக்கத்தையும் தந்து, சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

த. நந்தகுமார்
செயலாளர்,
ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்,
இரத்தோட்டை.





## பொருளாளரின் வாழ்த்துரை

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதற்கு ஒப்ப ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக பெருவிழா இவ்வளவு சிறப்பாக நிறைவு பெற்றுள்ளதை நினைவு கூர்ந்து, பொருளுக்கு எவ்வித தடங்களோ தட்டுப்பாடோ இன்றி நினைத்ததை செய்து முடிப்பதில் துணையாய் இருந்த எல்லாம் வல்ல பெருமானிற்கு முதற்கண் பாதக்கமலம் பணிந்து ஒரு வாழ்த்துச் செய்தி ஒன்றினையும் கும்பாபிஷேக விழா சிறப்பு மலரினூடாக பகிர்ந்துக் கொள்வதில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதையிட்டு மிக்க அகம் மகிழ்கிறேன்.

குறுகிய காலப்பகுதியில் பெருவளர்ச்சிக் கண்டு இன்று "திருக்கோயிலாக" உயர்வு பெற்றுள்ள இவ்வாலயத்தின் வளர்ச்சியில், என்னால் இயன்றளவு முடியுமான வரையில் சிறிதளவிலாவது பொருளாளர் நிலையிலிருந்து பணிபுரிய வாய்ப்பு கிடைத்ததை பெரும் பேறாக கருதி, என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டதில் ஓர் ஆத்ம திருப்தியும், ஆலயப் பணியின் மகத்துவத்தையும் உணர முடிகின்றது.

எனக்கு இவ்வாறாக கிடைத்த ஆத்ம திருப்தியின் பங்காளர்களாக பெரிதும் மதித்து போற்றத்தக்கவர்களாக, கௌரவ தலைவர் அவர்களுக்கும், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், மேலும் எல்லா வகையிலும் நிதியுதவி, பொருளுதவி தந்து உறுதுணையாக இருந்த கொடையாளிகள், அடியார்கள், அன்புள்ளங்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் என் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருக்கோயில் திருப்பணியில் ஒரு துளியேனும் என்னால் செய்து முடிக்க முடிந்தமையிட்டு சிறியவனான நான் உளத் திருப்தி அடைகிறேன். இப்பெருவிழா எல்லா வகையிலும் சிறப்புற்று நிறைவுபெற வாழ்த்துகின்றேன். எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வணங்குகின்றேன்.



நன்றி

சாமிக்கண்ணு நேசநாதன்
பொருளாளர்

உ

ஸ்ரீ செல்வ விநாயகர் துணை

# மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா

## சிறப்புற வாழ்த்துகின்றோம்.



இரத்தோட்டை, கொழும்பு வாழ்
மா/ இரத்தோட்டை இந்துக் கல்லூரி
பழைய மாணவர்கள்.

## இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர்

# ஆலய வரலாறு

இலங்கைத் திருநாட்டில் இந்து மதத்தின் வரலாறு மிகவும் பழமையானது. இலங்கையின் ஆதிகுடிகளின் வழிபாட்டு முறையானது இந்து மதத்தின் வழிபாட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தென்னிந்தியாவை காலத்திற்கு காலம் ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் தத்தமது ஆட்சிக் காலத்திலே தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் உள்ள இலங்கைத் தீவிலும் தமது அரசியல் செல்வாக்கை புகுத்தி இருக்கின்றார்கள். அந்தவகையில், இந்து மதத்தின் வழிபாட்டு முறைகள் கலை, கலாசார பண்புகள் தொடர்ச்சியாக இலங்கையின் பல பாகங்களிலும் பரவி நிலைபெற்று வந்துள்ளன.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து தமிழர்களை அழைத்து வந்து மலையகத்தில் அவர்களை குடியமர்த்தினார்கள். இவ்விதம் இலங்கை வந்த தென்னிந்திய தமிழர்கள் தமது பாரம்பரிய இந்துமத வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து பேணுவதற்காக மலையகத்திலே தமது இஷ்ட தெய்வங்களை அங்கே பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்கள்.

இலங்கையின் மத்திய மாகாணத்திலே மாத்தளை மாவட்டத்தில், வடக்கு எல்லையை நோக்கிய புராதன நகரம் இரத்தோட்டை ஆகும். மகா பராக்கிரமபாகு, வலகம்பா மன்னர்களது ஆட்சி காலத்துடன் தொடர்புடைய நகரமாக இது கூறப்படுகின்றது.

இரத்தோட்டை நகரை சுற்றிலும் பல பெருந்தோட்டக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு அங்கு பல ஆயிரக்கணக்கான மலையக மக்கள் குடியமர்த்தப்பட்டிருந்தார்கள். நகர் பகுதியிலே வியாபாரிகள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மற்றும் பல்வேறு தொழிற்துறை சார்ந்தவர்கள் தமது வியாபார நிலையங்களையும், வீடுகளையும் அமைத்து பல காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் சுமார் 100 வருட பழமை வாய்ந்த வரலாற்றை கொண்டதாகும். 1922ம் ஆண்டளவில் இன்று ஆலயம் அமைந்துள்ள வளவிலே ஒரு ஈரப்பலா மரத்தின் அடியில் சிறு கூடாரம் அமைத்து அதில் விநாயகர் படம் ஒன்றை வைத்து முதன்முதலாக வழிபாடு செய்யப்பட்டுள்ளது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூஜைகள் நடைபெற்று உள்ளது. திரு.சந்தனம் சாரதி அவர்கள் இந்த ஆலய வழிபாடு நடைபெற உதவியாக செயல்பட்டுள்ளார். 1942ம் ஆண்டுவரை இந்த வழிபாட்டு முறை தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. அதன்பிறகு விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்வதற்காக சிறு மூலஸ்தானமும் ஒரு மண்டபமும் அமைக்கப்பட்டு 1945ம் ஆண்டளவில் சிலை வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது.

தனியார் ஒருவருக்கு உரிமையாக இருந்த ஆலய காணி அக்காலத்தில் ஆலய தரும கர்த்தாக்களாக செயற்பட்ட திரு. S.A. சுப்பிரமணியம், திரு. S.V. இராசரத்தினம், திரு.S. வேலாயுதம்பிள்ளை, திரு.M.கந்தப்பு, திரு.P.பத்மநாதன் ஆகியோரின் பெயர்களுக்கு உறுதி எழுதப்பட்டது. பின்னர் அவர்கள் ஆலய காணி உறுதியை எதிர்காலத்தில் ஆலய நிர்வாகத்தை பொறுப்பேற்கும் நிருவாக சபையினரின் பெயருக்கு எழுதியுள்ளார்கள். தொடர்ந்து வந்த நிருவாக சபையினர், இந்த ஆலய காணி உறுதிக்கு பொறுப்பாக இருந்து வந்துள்ளனர்.

1946ம் ஆண்டிலே இந்த ஆலயத்தை மேலும் புனரமைத்து முறையாக பூஜைகள் நடைபெறுவதற்கு முதன்முதலாக ஒரு மகாசபை கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையினர் ஆலய

திருப்பணிகளையும், பூஜை ஒழுங்குகளையும் செய்து வந்துள்ளனர். 1952ம் ஆண்டு "சித்திரா பௌர்ணமி" தேர் திருவிழா உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு முதன் முதலாக விநாயகப் பெருமான் வெளிவீதி உலா எழுந்தருளி உள்ளார். 1972ம் ஆண்டு இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வரலாற்றில் முக்கிய சிறப்பு வாய்ந்த வருடமாக அமைந்தது. திரு.P.பத்மநாதன் அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினர் முன்னாள் இரத்தோட்டை இந்துக் கல்லூரியின் அதிபரும் ஆலய நிர்வாக சபை தலைவருமான திரு.V.சபாபதிப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலின் பெயரில் ஆலயத்திலே மூலஸ்தானம், மகா மண்டபம், வசந்த மண்டபம் என்பவற்றை புதிதாக நிர்மாணித்து 1972ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தை மிக சிறப்பாக நடாத்தி முடித்தார்கள். கும்பாபிஷேக சிவாச்சாரியார்களாக சிவஸ்ரீ. த. காசிநாத குருக்கள், சிவஸ்ரீ. சாமி விஸ்வநாத குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டமை சிறப்பம்சம் ஆகும்.

திரு.V. சபாபதிப்பிள்ளை அதிபர் அவர்கள் கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுள்ளார். 1972ம் ஆண்டு ஆலய வரலாற்றில் முக்கிய திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்ற முக்கிய வருடமாக நினைவு கூறத்தக்கதாகும்.

தொடர்ந்து 1976ம் ஆண்டு திரு.து.கிருஸ்ணசாமி அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினர் ஆலய வளவிலே மூன்று ஆலய விடுதிகளை அமைத்து ஆலய திருப்பணிகளை மேற்கொண்டனர். சித்திரா பௌர்ணமி தேர்த் திருவிழாவிலே பயன்படுத்தப்படுகின்ற தேர் சகடைக்கான மேல் கூடாரப் பகுதி இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து தயாரித்து கொண்டுவரப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

1980ம் ஆண்டுகளில் திரு. R. சண்முகம் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் ஆலயத்திலே கல்யாண மண்டபம் ஒன்றை அமைத்தனர். 1982ம் ஆண்டளவில் திரு. டாக்டர். R. மகாலிங்கம் அவர்களின் தலைமையிலான நிருவாக சபையினர் ஆலய குருக்கள், பண்டாரம் பதவிகளை வகிப்பவர்களுக்கு சேவை காலத்தில் தங்கியிருப்பதற்கு இரண்டு வீடுகள் அமைத்துக் கொடுத்தார்கள். மற்றும் ஆலயத்திற்கு முன்னால் வழி பிள்ளையார் ஆலயம் ஒன்றை அமைத்து 1984ம் ஆண்டிலே ஆலயத்தை மேலும் புனரமைத்து மஹா கும்பாபிஷேகத்தை சிறப்பான முறையில் நடாத்தி வைத்தார்கள். 1972ம் ஆண்டு கும்பாபிஷேகத்தை அடுத்து 12 வருட கால இடைவெளியில் அடுத்த மகா கும்பாபிஷேகம் 1984ல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து திரு.V.கதிரேசன், திரு.S.சண்முகவேல் ஆகியோர் 1994ம் ஆண்டு வரை நிர்வாக சபையின் தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டு பணியாற்றியுள்ளனர். 1994ம் ஆண்டு இறுதியில் ஆலய நிர்வாக சபையின் பொறுப்பை திரு.K. கருப்பையா அவர்களின் தலைமையிலான நிருவாக சபை ஏற்றுக்கொண்டது. 1994ம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திரு.K. கருப்பையா அவர்களின் தலைமையிலான சபையினர், முக்கியமான திருப்பணி வேலைகளை பல மில்லியன் ரூபா செலவில் மேற்கொண்டமை ஆலய வரலாற்றில் விஷேடமாக குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

1995ம் ஆண்டு ஆலயத்திலே நவக்கிரக ஆலயம் ஒன்றை அமைத்து கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. அதே வருடத்தில் சித்திரா பௌர்ணமி தேர்த் திருவிழாவிலே விநாயகர் வெளிவீதி உலா எழுந்தருள அழகிய "சித்திரத்தேர்" ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடாத்தப்பட்டது. அவ்வருடம் முதல் இந்த இரதத்திலேயே வருடாந்த தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. 1994ம் ஆண்டிலே இராஜகோபுர திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு இந்த 2000மாம் ஆண்டிலே இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. 1999ம் ஆண்டிலே ஆலய வளவிலே, இந்து கலாசார மண்டபம் ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் முதற்கட்ட வேலைகள் நிறைவுபெற்று கௌரவ முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1994ம் ஆண்டு முதல் இன்றுவரை ஆலய நிருவாக பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகின்ற திரு.K.கருப்பையா அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினர் இடைக்காலத்திலே ஆலயத்தின் எதிர்கால நலன் கருதி முக்கிய சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதில் ஆலய காணி அளக்கப்பட்டு முறையான காணி வரைபடமும் (Plan) காணி உறுதியும் பெறப்பட்டுள்ளன.

அடுத்ததாக பொதுமக்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட ஆலய வீடுகள் மூன்றும் எதிர்காலத்தில் ஆலய நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்தும் முகமாக மீளப்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிருவாக சபை மேலும் பல அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்கால திட்டங்கள் பலவற்றை தயாரித்து அத்திட்டத்தின் படி ஆலயத்தினை ஆகம விதிப்படி சகல பரிவாரக் கோயில்களும் அமைக்கப்பட்டு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

எனவே இத்தகைய நீண்ட சிறப்பான வரலாற்றை கொண்ட இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் எதிர்கால தலைமுறைகளுக்கு வளர்ச்சி பெற்ற ஒரு புண்ணிய தலமாக விளங்க ஸ்ரீ செல்வ விநாயகரை பிரார்த்திப்போமாக. அத்தோடு நல்லாசிகளும் கிடைக்க எம்பெருமானை வழிபடுவோமாக.



## ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அனுக்கிரகம்
அனைத்து அடியார்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு
மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற நடைபெற
வாழ்த்துகிறோம்.

திரு. K. மயில்வாகணம் குடும்பத்தார்
கொழும்பு



‘மேலான எண்ணம்
தெய்வ வழிபாட்டுக்கு நிகர்’

உ



# ஸ்ரீ செல்வ விநாயகர்
# திருவூஞ்சற்பதிகம்

நூலாசிரியர்
கரணவாய் ஆரிய திராவிட பண்டிதர்
வியாகரண சிரோமணி
சிவஸ்ரீ த. காசிநாதக்குருக்கள் அவர்கள்

விக்கினேசுரர் துதி
சார்த்தூல விக்கிரீஷதம் விருத்தம்

ஸ்ரீமத்செல்வ விநாயகம் கஜமுகம் ஸ்கந்தாக்ரஜம் வாமனம்
ரத்தோட்டா நகரே விராஜித மஹாசன்மந் திரஸ்தம்விபும்
பக்தாபீஷ்ட வரப்ரதம் சிவசுதம் தேவம்க்ருபாம் போநிதிம்
வந்தேமூஷிக வாஹநம் த்ரிணயனம் சந்த்ரார்த்த சூடாமணிம்

காப்பு
ஆசிரிய விருத்தம்

பொன்பூத்த நல்லிலங்கா புரியி லுள்ள
புகழ்பூத்த ரத்தோட்டைக் கோயின் மேவும்
மின்பூத்த செல்வவிக்கி னேச னார்மேல்
வில்பூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
மன்பூத்த கடவுளருக் கிடுக்கண் செய்த
வன்பூத்த கயமுகனா மவுணன் றன்னைக்
கொன்பூத்த கொம்பொன்றால் வென்ற அந்தக்
குஞ்சரமா முகவனடி காப்ப தாமே.

நூல்
ஆசிரிய விருத்தம்

சீர்மேவு நாதவிந்து கால்க ளாகச்
சிவமேவு சக்தியொளிர் வீட்ட மாகப்

பேர்வேு மந்திரங்க ளிழைய தாகப்
பெருமையுள நான்மறைகள் கயிற தாக
ஏர்மேவு முப்நிடதம் பலகை யாக
எழின்மேவு பிரணவம்பொற் பீட மாகத்
தேர்மேவு ரத்தொட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

சந்திரா தித்தர்வெண் குடைகை தாங்க
சமீரணர்தாம் வீசுஞ்சீர்க் கவரி தேங்க
சிந்துபதி சாந்தாற்றி யுவந்து வாங்க
தேவர்பதி வட்டமசைஇப் புளகம் வீங்க
வந்துபணி யடியர்துதி வசன மோங்க
வன்கயவ ரவ்விடம்விட் டகன்று நீங்க
சிந்தைமகிழ் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீ செல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

மங்கலமார் தேவர்சொரி மலர்கள் வீழ
வலிமைமிகு பூதர்நிரை நெருங்கிச் சூழ
தங்குசுடர் கண்டிருள்க ளழிந்து நீங்க
சாற்றவரு நல்லடியார் மலங்கள் பாழ
பொங்குறுசீர்த் துதியிசையின் மனஞ்சென் றாழ
பொற்புமிகு மரியயனே முதலோர் தாழ
தெங்குசெறி ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

புந்திமிகு சின்னரர்கள் சுருதி கூட
புனிதமுள பிரமன்பொற் றாளம் போட
சிந்தைமகிழ் தேவரம்பை யர்க ளாட
சீர்பரவு மன்பரிடர் யாவு மோட
விந்தையுள தும்புருநா ரதர்யாழ் பாட
விரும்புமறை யிசையெட்டுத் திசையு நீட
சிந்துரமார் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அமரர்தமை முன்னாளிற் பொருது வென்றே
அகங்கரித்த கயமுகனா மவுணன் றன்னை
சமரமதிற் கொம்பொன்றை முறித்தே யேவிச்
சடிதியிலே யுயிர்கவர்ந்த கணேச மூர்த்தி

இமயமலைப் பார்ப்பதியின் மூத்த மைந்த
இபமுகமு மைங்கரமு மினிது கொண்டாய்
சிமயமுவர் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

போதமுறு வியாதமுனி சொல்ல நன்மை
பொறுந்துறுசீர்ப் பாரதத்தை மேரு வென்னும்
பூதரமா மேட்டின்கண் முறித்த கொம்பால்
பூதலத்தோ ருயவெழுதும் புண்ய மூர்த்தி
மோதகமார் கரமுடனைங் கரங்கொண் டுள்ளோய்
மூஷிகவா கனத்தினரே யாட ரூஞ்சல்
சீதமிகு ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

ஆதிசிவன் புத்திரரே யாட ரூஞ்சல்
அன்பரிடர் தீர்ப்பவரே யாட ரூஞ்சல்
வேதமுதற் பொருளினரே யாட ரூஞ்சல்
மிளிர்பாசாங் குசத்தினரே யாட ரூஞ்சல்
சோதிவடி வானவரே யாட ரூஞ்சல்
துலங்குதுதிக் கையினரே யாட ரூஞ்சல்
தீதடையா ரத்தொட்டைப் பதிசார் கோயிற்
சிறிசெல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

பெருமையுள கும்பமுனி கொணர்ந்த தூய்மை
பிறங்குகா விரியாகு நதியை நல்ல
கிருடையுடன் காகவுரு வாகி வந்தே
கிடக்கைதனிற் கவிழ்த்தேகும் வகைதான் செய்த
அருமணியே உனதுபதச் சேவை செய்யும்
அந்தவர மெனக்கருள்வ தெந்த நாளோ
திருமருவு ரத்தோட்டை பதிசார் கோயிற்
சிறீ செல்வ விநாயகரே யாட ரூஞ்சல்.

வீசுசுடர்ப பொன்மகுடஞ் சிரசின் மின்ன
விளங்குறுசீர்ப் பட்டமணி நுதலின் மின்ன
பேசுமொரு மருப்பிற்கும் புரிப்பூண் மின்ன
பெரியமுறச் செவியாகுங் கவரி மின்ன
காசுமிளிர் மதாணிநிரை மார்பின் மின்ன
கருதவரு மரையிற்பொற் றுகிறான் மின்ன

தேசுமிகு ரத்தோட்டை பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ருஞ்சல்

வானமரு மதிமுடியீ ராடீ ருஞ்சல்
வல்லபைசா ரிடைமுடையீ ராடீ ருஞ்சல்
கானமரு மார்த்தொடையீ ராடீ ருஞ்சல்
கண்களொரு மூன்றுடையீ ராடீ ருஞ்சல்
மானஎலி வாகனத்தீ ராடீ ருஞ்சல்
வந்தடியேற் கருள்புரிவீ ராடீ ருஞ்சல்
தேனமரும் ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
சிறீசெல்வ விநாயகரே யாடீ ருஞ்சல்

வாழி
பம்பியசல் லாவினம்பால் சொரிந்து வாழி
பகருமழை பொழிந்துமுகில் நன்கு வாழி
அம்மளவர் கண்டிகைநீ றென்றும் வாழி
அரியதமிழ்ப் புலவரெலா மிகுந்து வாழி
வம்புசெறி குழன்மடவார் கற்பும் வாழி
மகிமைசெறி நால்வருணத் தோரும் வாழி
செம்மைவரு ரத்தோட்டைப் பதிசார் கோயிற்
செல்வவிக்கி னேசனருள் வாழி வாழி.



திருவூஞ்சல் முற்றிற்று
சுபம்

மூலம்
இரத்தோட்டை ஶ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலின் 1972 ம் ஆண்டுக்கான
கும்பாபிஷேக மலர்

## ‘மேலான எண்ணமே மேலான செயலாக பரிணமிக்கிறது’

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அனுக்கிரகம்
அனைத்து அடியார்களுக்கும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு
மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற நடைபெற
வாழ்த்துகிறோம்.

| | | |
|---|---|---|
| திரு. | P. யுவராஜா | கொழும்பு |
| திரு. | S. நித்தியானந்தன் | கொழும்பு |
| திரு. | M. குணசேகரன் | கொழும்பு |
| திரு. | S. ஞானகுமார் | கொழும்பு |
| திரு. | K. ரவிசந்திரன் | கண்டி |



‘இந்து பெரு மக்களாய் இணைந்து இன்பம் காண்போம்
அனைவரும் வாரீர்...’

## 1946 ஆண்டு வெளியிடப்பட்ட திருப்பணி விஞ்ஞாபனத்தின் பிரதி

உ

சிவமயம்



# றத்தொட்டை ஸ்ரீ விநாயகர் ஆலய திருப்பணி விஞ்ஞாபனம்.

விருத்தம்.

"புல்லினாற் பத்துக்கோடி புவிமண்ணால் நூறுகோடி
செல்லுமாங் காலந்தன்னிற் செங்கல்லாலாயிரங் கோடி
அல்லிமென் குழலாய் கேண்மோ ஆலயமடங்கள் தம்மை
கல்லினாற் செய்தபேர்கள் கைலைவிட்டகலார் தாமே."

**தர்ம சீலர்காள்!**

இற்றைக்கு 24 வருடங்கட்கு முன்பாக, புண்ணிய சீலர்கள் சிலரால் நிறுவப்பட்ட ஷெ ஆலயம் கவனிப்பாரில்லாமல் திருப் பணி, பூஜை, நைவேத்தியம் முதலியன நடைபெறாது சிறப்பற்ற முறையில் இருக்கிறது. சமய நிலையில் உச்சநிலையடைந்துவரும் இக் காலத்தில், ஷெ ஆலயம் இந்நிலையில் இருக்கக்காண்பது ஒவ்வொரு வருக்கும் கவலையைத்தரும் செயலாகும்.

இக்குறையை நிறைவேற்றுவதற்காக (22. 3. 46)-ல் ஷெ ஆலயத்தில் கூட்டப்பெற்ற மகாசபையில், அன்று தொடக்கம் பூஜை நைவேத்தியங்கள் நடப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு, திருப் பணியையும் தொடங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சிறு துளிபல சேர்ந்து பெருவெள்ளமாதலின், அன்பர்கள் யாவரும் ஷெ பணிக்குத் தங்களால் இயன்ற பணவுதவி புரிந்து, இத்தொண்டை நிறைவேற்றி, ஸ்ரீ செல்வ விநாயகர் திருவருட்செல் வர்களாக வாழும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

தங்கள் உதவியை விரும்பும்,

1. S. A. சுப்பிரமணியம் (ஓவசியர் றத்தொட்டை)
2. S. V. இராசரத்தினம் (L. P. மாத்தளை)
3. S. வேலாயுதபிள்ளை (L. P. றத்தொட்டை)
4. M. கந்தப்பு (General Merchant றத்தொட்டை)
5. P. பத்மநாதன் ,, ,,

ஸ்ரீ செல்வ விநாயகரின் நல்லருள் இப்புனித நாளில்
அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்.

# ராஜா நகை அடகு
# பிடிக்கும் இடம்





***Shirting & Suiting***



# RAJAH TAILORING MART

**No. 36A, Jayarathne Mawatha,**
**Rattota. Tel : 066 22 55 396**

## இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் நிர்வாக சபையின் கௌரவத் தலைவர்களாக இருந்து சமயப் பணி புரிந்தவர்கள்

திருவாளர்:-

S.A. சுப்பிரமணியம் - ஓவிசியர்
S. வேலாயுதபிள்ளை
V. சபாபதிப்பிள்ளை (முன்னாள் அதிபர் மா/இந்துக்கல்லூரி, இரத்தோட்டை)
P. பத்மநாதன்
S.V. இராசரத்தினம்
M. கந்தப்பு



திரு. செல்லப்பா இராஜதுரை (அமரர்)



திரு.இராஜதுரை ஸ்ரீ கந்தராஜா



திரு. D.கிருஸ்ணசாமி



திரு. R. சண்முகம்



திரு. R. மகாலிங்கம் - டாக்டர் (அமரர்)



திரு.V. கதிரேசன் (அமரர்)



திரு. S. சண்முகவேல்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்....

# INDRA

## Jewellers



**22 KT (916 K.D.M.) SOVEREIGN GOLD JEWELLERY**

# இந்திரா ஜுவலர்ஸ்

# ඉන්ද්‍රා ජුවලර්ස්


**S. Ravindran - Proprietor**

**Main Street, Rattota. Tel : 077 37 500 91**

ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
கும்பாபிஷேகம் சிறப்புற எமது வாழ்த்துக்கள்...

# R.L. STORES
# R.L. ஸ்டோர்ஸ்

***Wholesale Retail Dealers***



**No. 03, Jayaratne Mawatha,**
**Rattota.**
**Tel : 066 366 15 96**

# தொடரட்டும் அபிவிருத்திப் பணிகள்

இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதை எண்ணி மனமகிழ்ச்சியடைவதுடன், கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல செல்வ விநாயகனின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

1958ம் ஆண்டு முதல் ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் இந்த ஆலயத்தின் செயலாளராக நான் பணியாற்றியுள்ளேன். அக்காலப்பகுதியில் புகழ்பெற்று விளங்கிய சமயச் சொற்பொழிவாளர்களான திருமுருக கிருபானந்தவாரியார், நல்லை ஆதீனம் ஞானசம்பந்தர், டாக்டர் சிவ அன்பு, மணிபாகவதர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களை ஆலயத்திற்கு வரவழைத்து சமய சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தமை இன்றும் மறக்க முடியாத சம்பவங்களாகும்.

இன்றைய ஆலய நிருவாக சபையினர் திரு.மு.கருப்பையா அவர்களின் தலைமையில் விவேகத்துடனும், செயல்திறனுடனும் திருப்பணிகளில் ஈடுபடுவதைக் கண்டு வியப்படைவதுடன், மகிழ்ச்சியும் அடைகின்றேன். செல்வ விநாயகர் ஆலயத்தில் மிகக்குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய திருப்பணிகள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இதையிட்டு இறத்தோட்டை இந்து மக்களின் சார்பில், நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன், நிருவாக சபையினருக்கும் நல்லாசிகளையும் வழங்குகின்றேன். இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று நாடு நலம் பெற விநாயகனை வேண்டுகின்றேன்.

திரு.P.சொக்கலிங்கம் K.P
மூலம் :- ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜகோபுரம்
22.03.2000 கும்பாபிஷேக மலர்



**‘ இந்துக்களின் சமய பாரம்பரியத்தை பறைசாற்றும் மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற வாழ்த்துகிறேன்’**

உரிமையாளர்,
‘மோகன்ஸ்’
இல. 12, பிரதான வீதி,
இறத்தோட்டை.

N. யோகராஜ்,
(உபதலைவர்)
அம்பாங்கங்க கோரளை
பிரதேச சபை.



‘மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலகமெலாம்’

# இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் நிர்வாக சபையினர்



திரு. K. கருப்பையா (தலைவர்)



திரு. T. நந்தகுமார் (செயலாளர்)



திரு. S.நேசநாதன் (பொருளாளர்)



திரு. V.சண்முககாந்தி (உப தலைவர்)



திரு. S.ராஜ்குமார் (உப செயலாளர்)



திரு. T.சத்தியவந்தன் (உப பொருளாளர்)



திரு. M. ரட்ணஜோதி



திரு. K. சுப்பிரமணியம்



திரு. N. தனபாலன்



திரு. S. தேவமணி



திரு. P.சின்னையா



திரு. R. சசிகுமார்

## இறத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
## நிர்வாக சபையினர்


திரு. S.கிருஷ்ணகுமார்


திரு. A. அழகுராஜ்


திரு. A.அருணாசலம்


திரு. S.சண்முகராஜா


திரு. R.சிவனான்டி


திரு.S. ராஜேந்திரன


திரு. M. ஆனந்தராஜ்


திரு. N.சந்திரசேகரன்


திரு. M. ராஜ்குமார்

திரு. N. பிரேம்குமார்

உ
சிவமயம்

# விநாயகர் வழிபாடு

விநாயகர் வழிபாடு சைவ மக்களிடையே முதன் முதலில் தோன்றிய உருவ வழிபாடாகும் மக்கள், தேவர், முனிவர் யாராலும் வணங்குவதற்குரிய சிறப்பு பொருந்திவரும் தனக்கு மேலாக வேறொரு தலைவர் இல்லாதவரும் விநாயகர் என அழக்கப்பட்டு வழிபடும் பெருமையுடையவர். ஞானமே உருவாக விளங்குபவர் "வேலமுகத்து விநாயனை தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்பது முதுமொழி. இதிலிருந்து யானை முகத்துடன் கூடிய தொந்தி பொருந்த கடவுளாய் காட்சி கொடுத்து விக்கினங்கள் யாவற்றையும் நீக்கியருள்வதனால் 'விக்ன விநாயகர்' என துதிக்கப்படும் சிறப்புப் பொருந்தியவர் விநாயகர் என அழைக்கின்றோம்.

எக்கருமம் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கினால் அக்கருமம் வெற்றிகரமாக நிறைவு பெறும் என சைவ மக்கள் நம்பினர் அதனாலேயே 'நம்பிக்கையுண்டேல் தும்பிக்கை துதி செய்யும்' என்னும் பழ மொழி இன்றும் எம்மிடையே நிலவி வருகின்றது.

ஆலயங்களில் எக்கருமம் தொடங்குவதற்கும் முன்பதாக 'கணபதி ஹோமம்' நிகழ்த்துவதும் சைவமக்கள் எந்தக் கருமத்தைத் தொடங்கினாலும் பிள்ளையார் பூசையுடன் விநாயகரை குட்டி கும்பிட்டு தொடங்குவதும் கல்வியினைத் தொடங்கும் போதும் "கணபதி துணை" என்று சொல்லித் தொடங்குவதும் எடுத்த கருமம் வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கையினாலேயே.

விநாயகருடைய வழிபாடு கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என ஆராட்சியாளர்கள் கருதுகின்றனர். மகாபாரதத்தினை விநாயகப் பெருமான் எழுதிக் கொடுத்தார் என்னும் பழைய கதையை ஆதாரமாக வைத்து மகாபாரத காலம் கி.மு 3101 என கணக்கிட்டு மகாபாரதத்திற்கு முற்பட்டது இராமாயணம். இராமாயண காலத்தில் சிவபூசை செய்து பெருமைக்குரியவன் இலங்கை மன்னனாகிய இராவணன். சிவபூசை தொடங்குவதற்கு முன் விக்னேஸ்வர பூசை செய்தல் வேண்டும். எனவே விக்ன விநாயகரது வழிபாடு கி.மு 5000 ஆண்டுகட்கு முற்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கருதுவதில் தவறேதுமில்லை.

நாதம், விந்து ஆகிய இரண்டு தத்துவங்களே சிவமும் சக்தியுமென தத்துவ விளக்கத்தில் குறிப்பிடப்படுகின்றது. நாதம் - சிவம், விந்து - சக்தி சிவமும் சக்தியும் இணைந்து தோன்றும் உருவமே விநாயகரது தோற்றம் என குறிப்பிடப்படுகின்றது. இதனாலேயே விநாயகர் 'வல்லாம்பிகா சமேத விக்னேஸ்வராய நம' என்று சிறப்பாக துதிக்கப்படுகின்றார். முறிந்த கொம்பு உள்ள பகுதி பிந்து தத்துவமாகவும் துதிக்கை நாதத்துவமாகவும் அமைந்து காணப்படுவதால் விநாயகரை வணங்கினால் பார்வதி பரமேஸ்வரரை வணங்கிய பலன் கிடைக்கும் என பக்தர்கள் கருதி வழிபட்டு யோக போக மோஷ பலன்களை பெற்றதாக புராண வரலாறுகள் குறிப்பிட்டு காட்டுகின்றன்.

சிவாகம முறைப்படி அமைந்த ஆலயங்கள் யாவற்றிலும் விநாயகர் பூசையின் பின்பே மூலமூர்த்திக்குப் பூசை செய்யும் முறை இன்றும் நடைமுறையில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்விதமாகச் சிறப்புப் பெற்ற விநாயகப் பெருமானை வழிபடுவது மிகவும் சுலபமானது. சாணத்தில், சந்தணத்தில், மஞ்சளில் விநாயகரை அமைத்து எழுந்தருளியிருக்குமாறு செய்து அறுகம் புல்லினால் அர்ச்சித்து வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

'நற்குஞ்சரங்கன்று நண்ணிற் கலை ஞானம் கற்குஞ்சரக்கன்று காண்' என்பது சைவ சித்தார்ந்த அறிவுரை விநாயப் பெருமானது கருணை எமக்குக் கிடைத்து விட்டால் கலை, ஞானக் கல்வி வருந்திக் கற்க வேண்டியது ஒன்றன்று. இதன் கருத்தை விளக்குவதற்கே ஔவையார்

**'பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும்மிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றும் தா '**

என்று பாடினார்.

"பிரணவப் பொருளாம். பெருந்தகை ஐங்கரன்" என்னும் பாடல் பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரது பெருமையை எமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. சிவம் என்றும் மாறுபாடு எதுவுமின்றி இருந்தபடியே ஆகும். பொழியும் ஆற்றல் வாய்ந்தது. சக்தி காரிய பற்று ஆன்மாக்களுக்கு அருள் பொழிவது சிவம் சக்தியை நோக்க சக்தி காரியப்பட்டு எழுத்துக்கள் உதயமாயின. எழுத்துக்கள் சிவ சக்தி சம்பந்தமானவை அந்த எழுத்துக்களுக்குள்ளே முதன் முதலில் தோன்றியதும் எல்லா எழுத்துக்களும் தோன்றுவதற்கும் காரணமானதும் பிரணவமே எனவே பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரே முதன் முதலில் தோன்றிய உருவ வழிபாட்டுத் தெய்வம் என தத்துவ விளக்கம் விரித்துரைக்கின்றது.

**'ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்**
**நால்வாய் ஐங்கரத்தன் ஆறு**
**தரு கோட்டம் பிறையிதழித்**
**தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்**
**உருக்கோட்டன் பொடும் வணங்கி**
**ஓவாதா இரவுபகல் உணர்வோர் சிந்தைத்**
**திருகோட்டும் அவன் திருமால்**
**செல்வமு மொன்றோ வென்னச் செய்யும்தேவா '**

என்று சிவஞானசித்தியார் என்னும் நூலின் காப்புப் பாடல் குறிப்பிடும் போது விநாயகப் பெருமானுக்கு ஒரு கொம்பு, இரு செவி, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அடக்கும் ஆற்றலுடையவர் என்பதை அறிகின்றோம். தொடங்குகின்ற துதிக்கையுடன் கூடிய பிறைச் சந்திரன் போன்ற கொம்புடன் விளங்கும் விநாயகப் பெருமானை உள்ளன்புடன் வழிபட்டால் மனதில் துன்பத்தை நீக்கி பிரம்மா, விஷ்ணு முதலானோர்களை விட மேலான செல்வம் உடையவர்களாகச் செய்யும் ஆற்றல் உடையது என அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுவதை நோக்கும் போது விநாயகரது வழிபாடு மேலான செல்வத்தை எமக்கு கிடைக்கச் செய்யும் பலனைத் தரவல்லது என்பது தெளிவாகின்றது.

விநாயகர் சதுர்த்தி பிள்ளையார் பெருங்கதை முதலான விரதங்கள் விநாயகர் அருள் பெறுவதற்கு உரிய விரத நாட்களாகும்.

விநாயகர் புராணம் விநாயகர் அருள் புரிந்த வரலாறுகளை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறும் போது விஷ்ணு, மூர்த்தி, இந்திரன், ஆதிசேடன் முதலான பலவகையானவர்களும் தம்மை வந்து வழிபடும் போது அருள் பொழிந்த வரலாறுகளை மிகத் தெளிவு படுத்துவதை நாம் காணலாம்.

விநாயகருடைய வாகனம் எலி பார்வைக்கு மிக சிறிய பிராணியாகத் தோன்றுகின்றதே என ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால் கந்தபுராணத்திலே அதன் விளக்கத்தைப் பார்கின்ற போது ஆணவமே உருவமான காமுகா சூரன் எலி வடிவில் விநாயகப் பெருமானுடன் போர் புரிய வந்த போது ஆணவத்தை அடக்கி எலியைத் தனது வாகனமாக ஆக்கியருளியதை நாம் அறிகின்றோம்.

தலையில் மும்முறை குட்டி காதை இருகரங்களாலும் பற்றிப் பிடித்து தோப்புக் கரணம் போடும் பொழுது நாம் எமது ஆணவச் செருக்கு முழுவதும் அடங்கிய நிலையில் விநாயகப் பெருமானை வணங்க வேண்டும் என அறிவுறுத்தப் பெறுகின்றோம்.

நாம் பரிபூரணமாகச் சரணடைந்து வழிபடும் போது விநாயகப் பெருமானது பரிபூரண கிருபாகடாட்ஷத்தை பெறுகின்றோம். அன்றாட வாழ்வில் எக்கருமத்தைத் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கினால் அக்கருமம் அனைத்தும் வெற்றியாக முடிவுறுவதை அனுபவத்தில் அறிந்து விநாயகப் பெருமானை வழிபட்டு எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்று இன்புறுதற்கு நாம் எமது மனதை நல்வழிப்படுத்துதல் வேண்டும்.

விநாயக வழிபாடு என்பது நாட்டிலே கி.மு 5000 ஆண்டுகளிற்கு முன்பே இருந்தது என்பதற்கு இராமாயணம் சான்றுரைக்கின்றது. அன்றுமுதல் இன்றுவரை எல்லா ஆலயங்களிலும் விநாயகர் சந்நிதானமும் விநாயகருக்கு தனிக் கோயில்களும் அமைத்து வழிபடும் சிறப்புமிக்க சைவத்தமிழ் மக்கள் நாட்டிலே சாந்தி, சமாதானம், அமைதி வேண்டி விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்து பிரார்த்தித்து இஸ்டசித்திகளைப் பெறுவோமாக.

சிவஞானவாரிதி. சைவ சித்தாந்த காவலர்.<br>
ஞான சிரோன்மணி<br>
அமரர் கு. குருசுவாமி<br>
மூலம் : ஸ்ரீ சர்வாத்த சித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் 1998<br>
முகத்துவாரம், கொழும்பு



நாடு நலம் பெற ஸ்ரீ செல்வ விநாயகரின்
திருவருள் கிட்டட்டும்

# K. Krishna

## Pawn Brokers & Jewellers





அசல் 22கரட் தங்க நகைகளுக்கு நீங்கள்
நாட வேண்டிய ஒரே இடம்

# K. கிருஷ்ணா

## பவுண் புரோக்கர்

No. 59 A, Matale Road, Rattota.

Tel : 066 22 55 634

கௌரவ அமைச்சர்

## மான்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான்


அவர்கள் கலாசார மண்டப அடிக்கல் நாட்டு விழாவிற்கு
வருகை தந்த போது எடுக்கப்பட்ட புகைபடங்கள்








திருக்கோயிலின் வருடாந்த உற்சவத்தின் போது
கொடி ஊர்வலம் நகரை வலம் வரும் காட்சி



திருக்கோயிலின் வருடாந்த உற்சவத்தின் போது
கொடி ஊர்வலம் நகரை வலம் வரும் காட்சி



1985ம் ஆண்டிற்கு முன் வருடாந்த திருவிழாவின் போது
சுவாமி உள்வீதி வலம் வரும் காட்சி



கலாசார மண்டப முதற்கட்ட பூர்த்தியின் திறப்பு விழாவின்போது
கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கு
தலைவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் காட்சி.



1994 ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள்



# கும்பாபிஷேகத்தின் சிறப்பு

"உருஞ்சாய வாழ்க்கை யமனுடையைப் போக்கும்
இருஞ்சாக்கி யர்களெடுத்து ரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீஸ்வர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று தமது தமிழ்மறையின் ஊடாக கும்பாபிஷேகத்தின் மகிமையைக் கூறும் திருஞானசம்பந்தர், கும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தியை தரிசிக்காவிடின் எந்த பயனுமில்லை என்று வெகு அழகாக எடுத்துரைக்கின்றார்.

இக்கூற்றுப்படி பரந்த இவ்வுலகிலே ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்த இறைவனை கும்பத்திலே மந்திர உச்சாடனங்களினால் ஆவாகணம் பண்ணி ஆலயத்திலே எழுந்தருளியிருக்கின்ற இறைவனை அபிஷேகம் செய்து வழிபடலே கும்பாபிஷேகம் ஆகும்.

இறைவன் நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகிய பஞ்ச பூதங்களிலும், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற நிலைகளிலும் வியாபித்திருக்கின்றான். எனவே இந்த எட்டு நிலைகளிலும் இறைவனை நிலைநிறுத்தி செய்யப்படுவதுதான் கும்பாபிஷேகம் ஆகும். இது "குடமுழுக்கு", "பெருஞ்சாந்தி" என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. மேலும் மண் வடிவமாக குடம், நீர்வடிவமாக தீர்த்தம், காற்று வடிவமாக மந்திர உச்சாடனம், ஆகாய வடிவமாக ஒலி, நெருப்பு வடிவமாக ஓமம், சூரியன் வடிவமாக ஒளி, சந்திரன் வடிவமாக மனோலயம் என்பவற்றினூடாக ஆன்மா வடிவமாக உயிர்களின் கூட்டு வழிபாட்டினால் இறைவனை ஓரிடத்தில் நிலைநிறுத்துவது தான் கும்பாபிஷேகம் என்றும் அழகாக எடுத்தியம்புவர் நம் ஆன்றோர்கள்.

எனவே சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள வண்ணம் இந்த எட்டு நிலைகளில் பூஜை செய்யப்பட்டு திருவருளை கலசத்தில் ஏற்றி, அதை பூசித்து அந்த கும்பத்தை எடுத்துக்கொண்டு ஆலயத்தை வலம் வந்து கர்ப்பக் கிரகத்தில் உள்ள விம்பமாகிய இறைவன் மேல் தீர்த்தத்தை அபிஷேகம் செய்து இறைவன் சாநித்தியம் அடையும் வண்ணம் செய்வது தான் கும்பாபிஷேகம். இது பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படுகின்றது. இதனை கண்டுகளிப்பதன் மூலம் பன்னிரு ஆண்டுகள் தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுவதற்கு சமமாகும் என்றும் நூறு பேருக்கு திருமணம் செய்வித்த பலன் கிடைக்கும் என்றும் ஆன்றோர் கூறுவர்.

நாம் தெரிந்தோ, தெரியாமலோ அன்றாடம் பல பாவங்களை எமது மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களால் செய்கின்றோம். இவ்வாறு நாம் செய்த தீவினைகளுக்கு பிராயச்சித்தமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைத் தரிசித்தல். இதில் ஏதேனும் திருப்பணிகள் செய்தல் ஆகியவைகளே தீர்வுகளாகும். இதனை

உற்ற தொழி லினிவுரையி லருவினையு முளவா
மொன் மொன்றா லழியாதூனொழியா துன்னின்
மற்றிவற்றி னொரு வினைக்கோர் விளையால் வீடு
வைதீகசை வம்பகரு மரபி னாற்றப்
பற்றியது கழியுமிது விலையாலேற்கும்.....

என்ற பாடலினூடாக உமாபதி சிவாச்சாரியார் விளக்குகின்றார்.

எனவே தீவினைகளுக்கெல்லாம் தலையாயது சிவத்தீவினையாகும். இதனை தீர்த்துக்கொள்ள அன்றாடம் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். எனினும் இன்றைய அவசர யுகத்திலே தினமும் ஆலய தரிசனம் செய்ய முடியாதுள்ளது. அவ்வாறு ஆலயத்திற்கு சென்றாலும் அமைதியற்ற மனநிலையாலும், அறியாமையினாலும் மேலும் பல தீவினைகளை செய்பவர்களாகின்றோம். இவற்றை நீக்கிக்கொள்ள பிராயச்சித்தங்களையும், சாந்திகளையும் எம்முன்னோர்கள் கூறியுள்ளனர்.

அவ்வகையில் தினந்தோறும் சிவதரிசனம் செய்யாமையால் வரும் பாவங்களை உற்சவக் காலங்களில் சிவதரிசனம் செய்வதனால் தீரும் என்றும், இவ்வுற்சவ தரிசனத்தில் நேரும் பிழைகளும் தீவினைகளும் மகா கும்பாபிஷேக தரிசனத்தால் தீரும் என்பர் ஆன்றோர்.

இவ்வாறு அளவிடற்கரிய அரும் பலன்களை அள்ளித் தருகின்ற மகா கும்பாபிஷேகமானது, அகத்திற்கு வேண்டிய நற்புத்திரப் பேற்றையும் பரத்திற்கு வேண்டிய சிவபேற்றையும் தரவல்லது. எனவே இக்கும்பாபிஷேக தரிசனத்தின் மூலம் எம்பெருமான் ஸ்ரீ செல்வ விநாயகனின் திருவருள் துணைக்கொண்டு இம்மைக்கு தேவையான போக மோட்சங்களையும் மறுமைக்கு தேவையான பேரின்ப பெருவாழ்வினையும் பெற்றுய்வோமாக!

திருமதி. ஜீவராணி அறிவழகன்.
ஆசிரியர்.



ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
கும்பாபிஷேகம் சிறப்பு பெற எமது
நல்வாழ்த்துக்கள்

# இந்திரா ஷூ பெலஸ்

உங்களுக்கு தேவையான அனைத்து வகையான
உள்ளூர் தயாரிப்பு மற்றும் வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
பெண்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்களுக்கான
காலத்திற்கேற்ற–உள்ளம் கவரும் அழகிய வடிவமைப்பிலான
பாதணிகள், பாடசாலை பைகள், தொப்பிகள்.
மற்றும் அனைத்து வகையான பரிசுப் பொருட்களும்
மலிவான விலையில் தொகையாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன்
நாடவேண்டிய ஒரே இடம்...



இல. 80/1, பிரதான வீதி, இரத்தோட்டை.
தொ.பே. 066 22 55 244, 0777 29 31 37



**இரத்தோட்டை**
**ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்**
**சிறப்புற வாழ்த்துகிறேன்.**



ஓடைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஊற்றுக்களில் தோன்றினாலும் அவை ஒரு சேர சென்று சேர்வது கடல் எனும் ஒரு சமுத்திர ஞானத்தில் தான் என்பது போல மதங்கள் வெவ்வேறாயினும் அவையெல்லாம் வழிகாட்டுவது மனிதனின் நல்வாழ்விற்கும் சொர்க்கம் எனும் சுக வாழ்விற்குமாகும்.

அந்த வகையில் இரத்தோட்டை வாழ் மக்கள் பல்லினம் சார்ந்தவர்களாகவும், பல் மதங்கள் சார்ந்தவர்களாகவும் இருந்தும் ஒற்றுமையாக மத ஐக்கியத்துடன் வாழ்கின்றமையை நாம் போற்றிக்கொள்கின்றோம்.

அந்த போற்றுதலுக்கு அடையாளமாய் எமது இரத்தோட்டை நகரத்தின் வரவேற்பு வாயிலேயே அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் அமைதியின் சின்னமாக அனைத்து மக்களுக்கும் அருள் வழங்கும் தெய்வ சந்நிதானமாக சிறப்புடன் எழுந்தருளியிருக்கும் பூரிப்பில் இரத்தோட்டை வாழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் வாழ்த்துவதில் நானும் மகிழ்வுடன் இணைந்துக்கொள்கிறேன்.

எஸ்.பிலிப் சேவியர்.
(இரத்தோட்டை பிரதேச சபை உறுப்பினர்)



# சமயப் பணியில்
# ஒரு சமூகப் பணியாக.....

ஆலய வரலாற்றோடு பின்னிப் பிணைந்த சமூகப் பணியாக கல்விப் பணியும் அமைந்து வந்திருக்கின்றது. அந்த வகையில் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் அறநெறி பாடசாலை ஊடாக பல்வேறு சமூகப் பணிகளை செய்து வந்துள்ளது. இதில் அறநெறி கல்வி புகட்டல் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளமை இதனை பறை சாற்றுகின்றது. அறநெறி பாடசாலையை கொண்டு நடாத்துவதில் பெரும் குறைபாடாக இருந்த அறநெறி பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறையின் மத்தியிலும் சமூக நோக்கு கருதிய ஒரு சில ஆசிரியர்களின் மேலான ஒத்துழைப்பினால் தொடர்ந்தும் நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

முன்பு அறநெறி பாடசாலையில் தங்களை இணைத்துக் கொண்டு பணியாற்றிய முன்னாள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்தி நன்றி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். இனிவரும் காலங்களில் எம்பெருமானின் நல்லாசியுடன் தொடர்ந்து செவ்வனே நடைபெற இந்நன்நாளில் ஸ்ரீ செல்வ விநாயகர் பாதங்களை வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
அறநெறிப் பாடசாலை
பொறுப்பாளர்கள்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.



கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகிறோம்....

*With best compliments from.*

# P.C.R.

# ANTON GROCERY

## Wholesale & Retail Dealers






**No. 62, Main Street, Rattota.**

**Tel : 066 22 551 65**

# இந்துக்களும் அறிவியல் துறையும்

புனிதமான ஒன்றை பற்றிய நம்பிக்கைகளும் வழிப்பாட்டு முறைகளும் ஒருங்கிணைந்த செயற்பாடே சமயம் என்பது எமில் துர்க்கையின் வரைவிலக்கணமாகும். சமயத்துடன் இணைந்ததுதான் பண்பாடு. மனிதன் அறிவுத் திறனைப் பெற்று வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே. சமயமும் பண்பாடும் உடன் இருந்து வந்துள்ளன. அந்த வகையில் இந்து பண்பாடு என்பதும் பண்டைய காலந்தொட்டு தொடர்ந்து வருவதாகும். ஒரு பண்பாட்டிற்கு இருக்க வேண்டிய வரலாறு, கலை, தத்துவம், இலக்கியம் என்ற சகல பரிமாணங்களும் இந்துப் பண்பாட்டில் உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக அறிவியல் என்பதும் இந்துப் பண்பாட்டில் சிறப்பாகக் காணப்படுகின்றது. அறிவியல் என்பது விஞ்ஞானமாகும். அறிவைக் கொண்டு ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மைகளை பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுதலே அறிவியல் விஞ்ஞானமாகும். எமது மெய்யியலாளர்கள் பரிசோதனை மூலம் நிரூபித்துக் காட்டாவிட்டாலும், தொடர்ச்சியான அவதானிப்புக்கள், காரண காரிய தொடர்புகள் மூலம் ஆராய்ந்து தகவல்களை சமயத்துடனும் வாழ்வியலுடனும் இணைத்துக் கூறியுள்ளனர்.

இந்து மத அறிவியல், வானியல், சோதிடம், மருத்துவம், கணிதம் ஆகிய சகல அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. வெறும் வழிபாடு, சடங்கு என்பவற்றோடு மட்டும் நின்றுவிடாது அறிவியல் துறையிலும் இந்து மதம் சாதனை புரிந்துள்ளது. அறிவியல் சிந்தனையில் தேர்ச்சி பெற்ற ஐரோப்பியரே வியக்கும் வகையில் மெய்யிலாளர்கள், ரிஷிகள், ஞானிகளால் அறிவியல் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவியலில் வானியலும், சோதிடமும் முக்கியமானவை. வானியலின் மூலங்களை வேதங்களில் காணலாம். இங்கு வானியல் தொடர்பான சிந்தனைகளில் மண், விண், இடைவெளி பற்றிய ஆராய்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. சூரியன். சந்திரன். நாள், சந்திர மாதம், சூரிய வருடம் பற்றிய குறிப்புகள். 27 நட்சத்திரங்கள், ஆறு காலங்கள், 12 மாதங்கள் என்பன பற்றி கூறப்பட்டுள்ளன. இருக்கு வேதத்தின் "நாசதீய சூத்திரத்தில் சிருஷ்டி பற்றிய பாடலில் புவியின் தோற்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. கி.பி. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியராகிய தொலமி, நிக்கலஸ் கொப்பனிகஸ் ஆகியோர் குறிப்பிட்ட சூரிய மையக் கொள்கை பற்றி இருக்கு வேதத்தின் ஐதரேய பிரமாணம் ஏற்கனவே கூறிவிட்டது.

" சூரியன் ஒருபோதும் உதயமாவதோ அஸ்தமிப்பதோ இல்லை. மனிதனே அவ்வாறு எண்ணுகிறான். பூமி அதனைச் சுற்றி வலம் வரும்பொழுது பூமியின் ஒரு பகுதி பகலாயும் மறுபகுதி இரவாயும் தோன்றுகின்றது" என ஐதரேய உபநிடதம் கூறுகிறது.

பிரஷ்ன உபநிடதத்தின் கோள்களுக்கும் மனித வாழ்விற்கும் இடையேயான தொடர்புகள் விளக்கப்பட்டுள்ளன. மனிதர்களின் உடலியக்கச் செயற்பாடுகளில் கோள்கள் செலுத்துகின்ற செல்வாக்கினை இவ் உபநிடதம் விபரித்துள்ளது. பூமியில் வாழும் உயிரினங்களின் ஜீரண சக்தியை தூண்டுவதில் செவ்வாய் கிரகம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்றும் நரம்பு மண்டலங்களின் இயக்கத்தை புதனிலிருந்து வெளிவருகின்ற கதிர்வீச்சுக்கள் செம்மைப்படுத்துவதாகவும் இவ்வுபநிடதம் குறிப்பிடுகின்றது. வியாழக் கிரகத்திலிருந்து வெளிப்படும் "குருகாந்தம்" என்ற கதிர்வீச்சு மனிதர்களுடைய சித்த விருத்தியையும் ஆளுமைப் பண்பையும் அதிகரிக்கச் செய்வதாக குறிப்பிட்டுள்ள இவ்வுபநிடதம் சந்தான விருத்திக்கு உதவும் கிரகமாக சுக்கிரனை (வெள்ளி) சுட்டியுள்ளது.

புவியானது அண்டத்தில் வெடித்து சிதறிய தீக்கோளத்திலிருந்து சிதறிய ஒன்றே என்றும் தீக்குழம்பின் இறுகிய வடிவமே என்றும் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையில்
"விசும்பு வீழ் கொள்ளியின் மைப்பியர் துமிப்ப" என்ற பாடலின் மூலம் இதே கருத்து

கூறப்பட்டுள்ளது. அவ்வாறே வெள்ளி பற்றி புறநானூறும் சிலப்பதிகாரமும் சிறப்பாக கூறுகின்றன. இவ்வாறு புராதன இந்துக்கள் வானியல் பற்றி எண்ணிலடங்கா பல்வேறு தகவல்களை இன்றைய நவீன விஞ்ஞானம் வியக்கும்படி கூறியுள்ளனர்.

அடுத்ததாக இந்து அறிவியலின் சிறப்பம்சமான மருத்துவத்தை எடுத்துக்கொண்டால் இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானம் கூறும் எத்தனையோ விடயங்களை இந்துக்கள் ஏற்கனவே

கூறிவிட்டனர். நோயை அறிதலும், நோய்க் காரணத்தை அறிதலும், நோயை தணித்தலுமே மருத்துவமாகும். இதனை வள்ளுவர்
"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் அது"என கூறியுள்ளார்.

இந்துக்களின் மருத்துவக் கலை இருக்கு வேதத்திலேயே ஆரம்பிக்கின்றது. இருக்கு வேதத்தின் ஒஷத சூக்தம், வாதம், பித்தம், கபம் மூன்றையும் திரிதாது எண்கிறது. கண், காது சார்ந்த குறைபாடுகளை நீக்குபவர்களாக அஷ்வினி குமாரர்கள் போற்றப்பட்டனர். யசுர் வேதத்தில் குஷ்டம், இருதய நோய், காச நோய் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்து மத மருத்துவ வரலாற்றில் அதர்வ வேதம் முக்கியமானது. அதர்வ வேதத்தில் வரும்

**"பேஷஜானி சூக்தம்**
**ஆயுஷ்மானி சூக்தம்"**

என்பவற்றில் மருத்துவ சிந்தனை அதிகமாக உள்ளது. சூரியனின் சிவப்பு கதிர்களுக்கு மஞ்சட்காமாலையை கட்டுப்படுத்தும் சக்தி உள்ளதாக அதர்வ வேதம் கூறுகின்றது. அத்தோடு மனித உடல் கூற்றியல், குருதிச் சுற்றோட்டம் போன்ற கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. இன்றைய மூலிகை மருத்துவத்தின் முன்னோடியாக அதர்வ வேதம் விளங்குகின்றது. இந்து மருத்துவ துறையின் முன்னோடிகளாக சூத்திரேயர், தன்வந்திரி, சரகர், குஷ்ருதர் ஆகியோர் விளங்கினர். தன்வந்திரி இந்து மருத்துவத்தின் தந்தையென போற்றப்படுகின்றார். இவர் ஆயர்வேதத்தை 8 பிரிவுகளில் கூறியுள்ளார். சுஸ்ருதர் அறுவைச் சிகிச்சையின் தந்தையென போற்றப்படுகின்றார். அறுவைச் சிகிச்சையின்போது உணர்வை மறக்கச் செய்தல், கிருமிகளின் தாக்கத்தை கட்டுப்படுத்துதல் என்பன பற்றி சுஸ்ருதர் சம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

சரகர் எழுதிய சரசசம்ஹிதையில் 149 நோய்களும் அவற்றுக்கான மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. 13 இரத்தக் குழாய்கள், அதைக் கட்டுப்படுத்தும் மையங்கள், இரத்தோட்டம் தடைப்பட்டால் வரும் விளைவுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவை பற்றிய ஆய்வுகள் 1628 இற்கு பின்னரே மேலைநாடுகளில் ஆரம்பமாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்து இதிகாசங்களில் மருத்துவச் சிந்தனைகள் காணப்படுவதை வான்மீகி இராமாயாணத்தில் சஞ்சீவி மலையில் காணப்பட்ட மூலிகை பற்றியும் அவைகள் குணப்படுத்தும் நோய்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களிலும் மருத்துவர்களின் இயல்பு, அறுவைச் சிகிச்சை முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் ஆலயங்களும், மருத்துவ சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்து வழிபாட்டு முறைகளில் பல்வேறு மருத்துவ சிந்தனைகள் காணப்படுகின்றன. இதில் யோகாசனம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளமை இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நெற்றி பொட்டில் திலகமிடுவதால் நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கும் என இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே தோப்புக்கரணம், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம், தல யாத்திரை செய்வதாலும், கிரி வலம் செல்வதாலும் ஒருவரின் உடலிலுள்ள நாரி, இடுப்பு, முழங்கால் தசைகள் நன்கு பலமடைகின்றன.

ஆங்கில மருத்துவத்தால் தீர்க்க முடியாத பல நோய்களை யோகாசன முறைகள், சமய சின்னங்களை அணிதல் போன்றவை மூலம் குணப்படுத்திக் கொள்ளலாம். புராதன

இந்துக்கள் கணித துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அட்சர கணிதம், திரிகோண கணிதம் என்பவற்றின் பயன்பாட்டை இந்துக்களின் வாழ்வில் காணலாம். திரிகோண கணித அடிப்படையில் வடிவங்களும் அளவுப் பிரமாணங்களும் கையாளப்பட்டுள்ளன. வேதிகளை வட்டம், சதுரம், அரை வட்டம், முக்கோணம், செவ்வக அமைப்புகளில் நிர்மாணிப்பதை "பௌதாயன சூத்திரம்" கூறுகின்றது.

பைதகரசின் தேற்றத்தை ஒத்த வழிமுறைகள் கி.மு..500ம் ஆண்டுகளிலேயே "கல்ப சூத்திரத்தில்" கூறப்பட்டுள்ளது. வராக மிகிரர், பிரம்ம குப்தர், முதலாம் பாஸ்கரர், ஆகியோர் கணித மேதைகளாக விளங்கியுள்ளனர். ஆகமங்களை எடுத்துக்கொண்டால் ஆலயங்களை அமைக்கும் அளவுப் பிரமாணம், திசைகளின் கணிப்பு முறைகள் கணித அடிப்படையில் கூறப்பட்டுள்ளன.

திருமதி மகேஸ்வரி சுந்தரமூர்த்தி,
ஆசிரிய ஆலோசகர்,
வலயக்கல்விப் பணிமனை,
மாத்தளை.



புனரமைக்கப்பட்ட திருக்கோயிலின்
மூலஸ்தானம்



புதிதாக நிர்மானிக்கப்பட்ட திருக்கோயில்
வில்மண்டபத்தின் அழகிய தோற்றம்



புதிதாக நிர்மானிக்கப்பட்ட திருக்கோயில்
வசந்த மண்டபத்தின் அழகிய தோற்றம்



திருக்கோயிலில் செதுக்கப்பட்ட சிற்ப
வேலைகளின் ஓர் அழகிய தோற்றம்



திருக்கோயிலில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட
வில் மண்டபத்தின் தோற்றம்




திருக்கோயிலில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட
கொங்ரிட் கூரையின் அலங்கார தோற்றம்

கும்பாபிஷேகம் இனிதே நிறைவுபெற்று
ஸ்ரீ செல்வ விநாயகர் திருவருள் கிட்ட
இரு கரம் கூப்பி வணங்குகிறோம்.

நியாயவிலையில் மலிகைப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஒரே இடம்...

# P.M. ஸ்டோர்ஸ்




# P.M. STORES

**No. 31, Main Street, Rattota.**


**Tel : 066 57 11 888**

ஸ்ரீ செல்வ விநாயகரின் திருவருள் யாவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

# Rams Trading

# ராம்ஸ் டிரேடிங்

Dealers in all varieties of poly sack Bags,
Hdpe, Ldre, Polythene Bag Printing,
Lunch Box, Lunch Sheet, Disposal cups,
Yoghurt Cups, Curry Bowls, Paper Plates,
P.V.C. Food Trays, Egg Tray, Straw & Etc.









**L.G. 35, People's Park Complex, Pettah,**
**Colombo - 11**
**Tel : 011 233 55 32, Fax : 011 233 55 32**
**E-mail : rams_tra@yahoo.co.in**

# 1994 முதல் இன்றுவரை திருக்கோயில் திருப்பணியின் வளர்ச்சிப் போக்கு

- 1994ல் நவக்கிரஹ பரிவாலயம்
- 1995ல் இராஜகோபுர திருப்பணி ஆரம்பம் - 2000.03.22ல் நிறைவு
- 1994 சித்திரத்தேர் திருப்பணி 1995ல் நிறைவு
- வள்ளி தெய்வானை சமேத முருகன் ஆலயம் மஹா லக்சுமி ஆலயம் அமைக்கப்பட்டது.
- 2000ம் ஆண்டு கலாசார மண்டப முதற்கட்டடப் பணி நிறைவு
- ஆலய கூரை கொங்கிரிட் இடப்பட்டமை.
- வசந்த மண்டப புனரமைப்பு
- ஆலய வளவிற்குள் தேர்முட்டி புதிதாக அமைக்கப்பட்டமை
- 27 அடி உயரமான மூலஸ்தான விமானம் அமைத்தமை.
- மகத்தான வில் மண்டபம், சரஸ்வதி, லக்சுமி, துர்க்கை, தட்சணா மூர்த்தி, மகா விஷ்ணு, ஆஞ்சநேயர், நவக்கிரகம், சண்டேஸ்வரர், சந்திரன், சூரியன், வைரவர் பரிவார ஆலயங்கள் அமைக்கப்பட்டமை.
- மூலமூர்த்தி, வழிப்பிள்ளையார், பரிவார மூர்த்திகள், புதிதாக விக்கிரகங்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டமை.
- ஆலய வளவிற்குள் புதிதாக காரியாலயம் அமைக்கப்பட்டமை.



*With best compliments from:*

# Rattota Gold House



Dealers in 22Kt 916 K.D.M.
Genuine Gold Jewellery

No. 36, Main Street,
Rattota.
Tel : 072 721 52 74

# Pushpa Jewellery



## புஷ்பா ஜூவலரி

## පුෂ්පා ජුවලරි

No. 17, Main Street, Rattota.
Tel : 066 22 555 72

# SHAKTHI

## Paint Centre



Dealers in Rock, Sunny, CIC Debeer,
Lanco, Permaglaze,
***Paint Specialist in Computer colour Mixing.***

No. 14, Main Street, Rattota.
Tel : 072 72 15 274

# ஸ்ரீ லக்ஷ்மி வழிபாடு

நமது வாழ்வில் நாம் பலவிதமான பூஜைகளைச் செய்கின்றோம். கோவில், வீடு, வியாபார நிலையம், பொது இடம், அரச இடம் போன்றவற்றில் பூஜைகள் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் எல்லோராலும் எல்லா இடத்திலும் செய்யப்படும் பூஜைகள் இருக்கவே செய்கின்றன அவையே விக்னேஷ்வரர், லக்ஷ்மி பூஜைகளாகும்.

ஆம்! விக்கினங்கள் நீங்கி எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டும் என்ற பிரார்த்தனையே விக்னேஷ்வரர் வழிபாடாகும். சகல சம்பந்துக்களுடனும் லக்ஷ்மி கடாட்ஷத்துடனும் வாழ்வதற்கான பூஜையாகும். பக்தர் விநாயகப் பெருமானை வழிபட்டு அவரின் அருளுடன் ஸ்ரீ லக்ஷ்மி தேவியை வழிபட்டு லக்ஷ்மி கடாட்ஷத்துடன் வாழ இது வழிவகுக்கின்றதெனலாம். எனவே பயன்தரு ஸ்ரீ லக்ஷ்மி வழிபாட்டினை இங்கு நோக்குவோம்.

### லக்ஷ்மி வாசம்

கோயில், வீடு முதலிய கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்பு வெற்றுக்காணியிலும் கட்டிடம் கட்டிய பின் புதிய கட்டிடத்திலும் பசு மாட்டைக் கட்டி "கோவாசஞ்" செய்கிறோம். மகா லக்ஷ்மி பாவில் உள்ளதால் "மகா லக்ஷ்மி வாசம் " இவ்வாறு இடம் பெறுகின்றது. ஒரு வீடு நிர்மாணிக்கப்படும் போது "மகா லக்ஷ்மி " க்கான இடமும் வகுக்கப்படும் வழக்கம் உள்ளது. நாம் வீட்டுக் கோபுர வாசல்களை மிதியாமல் கடந்தே செல்கின்றோம் ஏன்? அங்கே மகா லக்ஷ்மி வாசம் செய்கின்றாள் என்பதனாலாம்.

கோயில் கோபுர வாசல் மூர்த்திகளுக்கான சந்நிதி வாசலில் மேலே பார்த்தால் இரு யானைகளுக்கு நடுவே லக்ஷ்மி உள்ளமையை நோக்கலாம். பண்டைய காலத்தில் வீட்டு வாசல் நிலைகளில் லக்ஷ்மியை செதுக்கி வைத்துள்ளனர் இப்போது இவ்வழமை அருகி வருகின்றது. என்றாலும் லக்ஷ்மி வாசல் முதன்மையானது என்பது புலப்படுகின்றது.

### பூஜை

பூஜை ஆரம்பத்தில் "தீப லக்ஷ்மி நமோஸ் - துதே" எனக் கூறி வழிபாடுகள் நடைபெறுவதை நாம் அறிவோம். இதே போன்றதே பொது இடங்களிலும் அரச வைபவங்களிலும் "மங்களவிளக்கு" ஏற்றுதல் வழிபாடாகும். கோவிலில் மூர்த்தி ஸ்தாபனத்தின் முன் "தீப ஸ்தாபனம், தீப லக்ஷ்மி யை" வாசஞ் செய்யும் முகமாக நடைபெறுகின்றது.

இலங்கையில் உள்ள கோவில்களில் இப்போழுது "திருவிளக்குப் பூஜை" மிக விரிவான முறையில் செய்யப்படுகின்றது. "தீப லக்ஷ்மி "யைப் பக்தி சிரத்தையுடன் வழிபடும் அழகே தனி அழகு. இங்கு ஒருமித்த ஒரே நோக்குடனான லக்ஷ்மி வழிபாட்டினை நாம் காண முடியும் .

கும்பாபிஷேக கிரியைகளில் "தானியபூஜை" உள்ளது. இது தானிய லக்ஷ்மி வழிபாடு ஆகும். மகா லக்ஷ்மியின் பேரருளுக்காக மகா லக்ஷ்மி யந்திர பூஜை மகா லக்ஷ்மி ஹோமம் என்பன செய்யப்படுவதை நாம் காண்கின்றோம். அதிலே பங்கு கொண்டு வழிபாடு செய்கின்றோம். இதுவும் வேண்டுதல் வழிபாடாக அமைகின்றது.

### உறைவிடம்

பசு, வில்வம் இலை, வெற்றிலை, தேங்காய், வேம்பு, மஞ்சள், குங்குமம், எலுமிச்சம் பழம், பவுண், தானியங்கள், முத்து, இரத்தினம் போன்றவற்றில் லக்ஷ்மி உள்ளாள் என்பது ஐதீகம். எனவே இவை பக்தி சிரத்தையுடனான மங்களப் பொருட்களாக அமைகின்றன.

### அணிகலன்

மகா லக்ஷ்மியின் அருளுக்காக பூஜிக்கப்பட்ட லக்ஷ்மி யந்திரத்தை கூட்டுக்குள் வைத்து அணியும் வழக்கம் உள்ளது. வீடு, வியாபார நிலையங்களிலும் லக்ஷ்மி யந்திரம் உள்ளமையை நாம் காணலாம்.

"பெண்ணிற்கு அணிகலன் மாங்கல்யம்" என்பது முதுமொழி. திருமணச்சடங்கில் விரிவான மாங்கல்யப் பூஜைக்குப் பின் மாப்பிள்ளை கட்டும் மாங்கல்யத்துடன் பெண் "சுமங்கலி" என சிறப்புப் பெயரைப் பெறுகின்றாள். அங்கே அவள் லக்ஷ்மி கடாட்க்ஷங் கொண்டவள் என்ற பொருள் தொனிக்கின்றது.

### ஸ்ரீ லக்ஷ்மி தேவி

செந்தாமரை மலரில் வீற்றிருப்பவள் செந்நிற மேனியள் இரு கரங்களிலும் செந்தாமரை மலர்களைத் தாங்கியிருப்பவள் லக்ஷ்மியின் இரு மருங்கிலும் இரு யானைகள் செந்தாமரைப் பூக்களால் பூஜிக்கின்றன.

ஸ்ரீ லக்ஷ்மி தேவியானவள் தன, தானிய, மஹா, சௌபாக்கிய, சந்தனம் போன்ற ஏனைய முகூர்த்தங்களில் அவற்றிற்கேற்ப வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

### விரதம்

வெள்ளிக்கிழமைகளில் லக்ஷ்மி விரத வழிபாடு செய்தல் நல்லது.

ஆவணி பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமை அன்று கும்பம் வைத்து விரத அனுஷ்டானங்களுடன் ஸ்ரீ வரலக்ஷ்மியை வழிபட்டு வருவது "ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்" ஆகும்.

நாவராத்திரியில் ஸ்ரீ லக்ஷ்மிக்கான சிறப்பு விரத வழிபாடுகளை நாம் செய்து வருகின்றோம். ஸ்ரீ லக்ஷ்மி வழிபாடு அதி மேன்மையானது.

ஆம்! அரசன் முதல் ஆண்டி வரை செய்யும் வழிபாடு ஸ்ரீ லக்ஷ்மி வழிபாடு. ஸ்ரீ லக்ஷ்மி வழிபாட்டினை மஹா துறவிகள் கூடச் செய்துவருகின்றனர். சங்கீத சாஹித்யங்கள் ஸ்ரீ லக்ஷ்மிதேவியைப் புகழ்ந்து பாடிப் பாமாலை சூட்டியுள்ளனர்.


"பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை" என்பது முதுமொழி லக்ஷ்மி கடாட்ஷம் இருந்தாலேயே சௌபாக்கிய வாழ்வு கிட்டும். நாட்டுக்கும் ஊருக்கும் நமக்கும் உகந்த வழிபாடு ஸ்ரீ லக்ஷ்மி வழிபாடு.

*எனவே ஸ்ரீ லக்ஷ்மியை வழிபடுவோம்! நல்வாழ்வு பெறுவோம்.*
*சகல சௌபாக்கிய மஸ்து!*

பிரம்ம ஸ்ரீ சோ. குஹானந்தசர்மா
மூலம் : ஸ்ரீ சர்வாத்த சித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் 1998
முகத்துவாரம், கொழும்பு

மக்கள் மனம் மகிழ்ந்து நாடு செழிக்க
ஸ்ரீ செல்வ விநாயகர் துணை செய்யட்டும்

# காந்தி கபே



சைவ, அசைவ உணவு வகைகளை
சுவையாகவும் சுடச்சுடவும் பெறறுக்கொள்ள
சிறந்த உணவகம்.

உரிமையாளர் –
திரு. V. சண்முககாந்தி

55A, Main Street, Rattota.

# வழிபாட்டின் நாயகனே!

இலங்கா புரியில்....
மணம் பரப்பும்
மாத்தளை மண்ணில்
இரத்தோட்டை மாநகரில்
இறை ஆலயமாம் .. எங்கள்
இணையில்லா ஆலயம்
ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்!
நூறாண்டுகள் வரலாற்று
மகிமை கொண்டு
பக்தர்களுக்கு அருள் சொரியும்
விக்கின விநாயகன் – எம்
ஸ்ரீ செல்வ விநாயகன்

சித்திரா பௌர்ணமியில்
சித்திரத் தேரில்
சிறப்புடன் பவனி வரும்
சிறப்புக் கொண்ட எம்பெருமான்
சிந்தையெல்லாம் எம் சிந்தையெல்லாம்
செதுக்கிச் சிற்பமாக்கும்
சிறப்புக் கொண்ட எம்பெருமான்!
அருளை அள்ளித் தந்து
அற்புதமும் செய்து காட்டி
திருவிழாவில் பெயர் பெற்று
தித்திக்கும் செல்வ விநாயகப் பெருமான்

இன்று...
திருக்கோயிலாய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் ...
திருப்திக்கொள்ள வைக்கின்றாய்
பலரை ..!!!
திரும்பிப் பார்க்கவும் வைக்கின்றாய்

ஆலய வளர்ச்சியில் ..
அள்ளிஅள்ளிவழங்கும் அடியார்களுக்கு
"ஆன்மீக பசி" போக்கும்
அற்புத விநாயகன் நீ!
அடியார் வினை தீர்க்கும்
அளவிலா பெருமான் நீ!
புதிதாய்.. புத்தம் புதிதாய்
புதுப் பொழிவு பெற்றுள்ள
பூர்வீக புண்ணியத் தலம் கண்ட நீ
எம்மில் ...என்றும்
இதயக் கோயிலாய்
இறத்தோட்டையில் இடம்பிடிப்பாய்
தடம் பதிப்பாய்!
வி – நாயகனே– நீ என்றும்
எங்கள் வழி நாயகனே!
எங்கள் வழிபாட்டின் நாயகனே
இரத்தோட்டையின் நாயகனே
இல்லங்கள் தோறும் நாயகனே
இனிமேலும் இனியில்லா
ஸ்ரீ செல்வ விநாயகனே!



திரு.என். சந்திரசேகரன்
அதிபர்
மா/வேவல் மட த.வி
இரத்தோட்டை.

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய இராஜ கோபுர கும்பாபிஷேகம்
இனிதே நடைபெற்று நாடு நலம்பெற அம்பாளின்
திருவருளை வேண்டுகின்றோம்.



# சிவசக்தி கோபரேஷன்

Importers of Quality Vegetable Seeds
Wholesale & retail Dealers in Agro chemicals
fertilizers, Sprayers, "AGRO" and "CENTRIC"
Domestic Water Pumps

No. 58, Main Street, Matale.
Tel : 066 22 22 599
Fax : 066 22 30 403

# சிந்தனையின் ஊற்றிலிருந்து

இரத்தோட்டை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 18.03.2013 அன்று நடைபெறவுள்ளது.மகா கும்பாபிஷேகத்திற்கு வெளி வரவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதை இறைவன் கொடுத்த கொடையாக உணர்கின்றேன். அறக்கருத்துக்களையும், விழுமியப் பண்புகளையும் வளர்க்கும் பிரதான இடமாக ஆலயம் திகழ்கின்றது. **"மனம் போல வாழ்க்கை"** என்ற கூற்றுக்கமைய எவர் ஒருவர் பக்தி புனிதத்துவத்தையும், விழுமிய, அற பண்புகளையும் கடைபிடிக்கின்றாரோ அவருடைய வாழ்வே சுபீட்சமானதாக அமைவதை இன்று நாம் அனுபவத்தினூடாக பார்க்கின்றோம்.

மாத்தளை மாவட்டத்தைப் பொறுத்தவரை விநாயகர் ஆலயங்கள் சராசரியாக இருபத்தொன்பது இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் ஆறு ஆலயங்கள் அடங்கும். அதேபோல் சராசரியாக இருபத்தெட்டு முருகன் ஆலயங்களும், ஐம்பத்திரண்டு அம்மன் ஆலயங்களும் இருக்கின்றதென வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

அந்தவகையில் விநாயகப் பெருமானைப் பற்றிய சில விடயங்களை குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்குமென நினைக்கின்றேன். விநாயகர் வழிபாடே இந்து மக்களிடையே முதன்முதலில் தோன்றிய உருவ வழிபாடாகும். நாம் எக்கருமத்தை தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடனேயே தொடங்குகின்றோம். "விநாயக வழிபாடு வெற்றியைத் தரும்" என்பது, சகலரதும் நம்பிக்கையாகும். விநாயக பெருமானை வழிபடுவது மிகவும் சுலபமானது. சாணத்தில், சந்தனத்தில், மஞ்சளில் விநாயகரை பூசித்து எழுந்தருளியிருக்குமாறு செய்து அறுகம்புல்லினால் அர்ச்சித்து, அடியார் வேண்டும் வரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கணபதி கண பதி க ஞானம், ண மோட்சம், பதி தலைவன். எனவே தன்னை அடைந்தோருக்கு ஞானத்தினால் மோட்சத்தை கொடுக்கும் தலைவராய் உள்ள பரபிரம்ம சொரூபி ஆவார்.

விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கரங்கள் உண்டு. ஒரு கையில் மோதகம் ஏந்தியிருக்க, இன்னொரு கையில் கொம்பை முறித்து வைத்திருக்க, அதனை தேவர்களுக்காக வைத்திருக்கின்றார் என்பது ஐதீகம். துதிக்கையில் இந்திர கலசம் வைத்திருப்பது, அதனைத் தந்தை தாயாருக்குப் பாத பூஜை செய்வதற்காக வைத்திருக்கின்றாரர் என்பது பொருளாகும். மற்றைய இரு கரங்களிலும் அங்குசமம், பாசமம் வைத்திருக்கின்றமை ஆணவமாகிய யானையை பாசத்தால் கட்டி அங்குசத்தினால் அடக்குவதற்காக என பொருள்படும். ஆன்மாக்களாகிய எமக்காக அவர் இரு கரங்களை வைத்திருப்பது அவருக்கு எம்மீதுள்ள கருணையை விளக்குகின்றது என்பது பொருள். வி + நாயகன் என்றால் வேறு தலைவன் இல்லாதவர் என்பது பொருள்.

இவ்வாறு விநாயகப்பெருமானை பற்றி நிறைய விடயங்களை கூறலாம். அந்த வகையில் இவ்வாறான ஒரு தலைவனை இரத்தோட்டையில், ஆரம்பத்தில் ஒரு மரத்தடியில் ஒரு படத்தை வைத்து வணங்கி, பின்னர் ஆலயமாக உருவெடுத்து, இன்று திருக்கோயிலாக மாறியுள்ள ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக அமைவதற்கும், அதன்படி ஆகம விதிகளை பின்பற்றி எதிர்கால சமுதாயத்திற்கு முன்னோடியாக மேலும் திகழ வழிவகுக்க வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை போற்றித் துதிக்கின்றேன்.

**நன்றி**

திரு.ச.ஜீவரட்ணம்
மா/இந்து தேசியக் கல்லூரி,
மாத்தளை.

# சண்முகநாதன் நாகதம்பிரான் குடும்பம்



கும்பாபிஷேகம்
சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

இல. 22,
வேவல்மட தோட்டம்,
இரத்தோட்டை.

தொ. பே. 071 253 26 26

# சண்முகநாதன் கண்ணன் குடும்பம்



கும்பாபிஷேகம்
சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

இல. 22,
வேவல்மட தோட்டம்,
இரத்தோட்டை.

தொ. பே. 071 21 25 897

*With Best Compliments From :*

Demak

# Demak Manufacturing Lanka (Pvt) Ltd.

**Licensed Manufacture, Distributor & Promoter of Motor cycles, Spare Parts & Related Services**

**Mr. Y.R. JEYARAJ**
Manager - Logistics Operations

Mob : +94 77 477 44 02
E-mail : yjeyaraj@demakmotor.lk

**No. 199, Vauxhall Street,**
**Colombo 02, Sri Lanka.**

**Tel/ Fax : +94 11 11 211**

**web : www.demakmotor.com**

(A Member of Demak Group - Malaysia)

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர்

திருக்கோயில்

மஹா கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

PEOPLE'S BANK


THE PULSE OF THE PEOPLE

கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகிறோம்....

# Luxmi Stores

## ලක්ෂ්මි ස්ටෝර්ස්

## லக்ஷ்மி ஸ்டோர்ஸ்



**No. 44 A, Main Street, Rattota.**

**Tel : 066 22 550 99**

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
மகா கும்பாபிஷேகம் சிறப்பு பெற எமது நல் வாழ்த்துக்கள்

# S.J. ஸ்டோர்ஸ்

*Wholesale & Retail Dealers in*
*Grocery Items*





# 5/3, Janaka Bandara Thennakoon Mw,
Rattota. Tel : 0777 10 52 46

## ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய
## மஹா கும்பாபிஷேகம்
## இனிதே நடைபெற எங்களது மனமார்ந்த
## வாழ்த்துக்கள்



**ஸ்ரீ வீரம்மா காளியம்மன் ஆலய**
**நிர்வாக சபையினர்**
**கம்மடுவ.**

රත්තොට ශ්‍රී සෙල්ව විනායගර් කෝවිලේ පැවැත්වෙන
මහා කුම්භාභිෂේක උත්සවයට අපගේ සුභ පැතුම්.

# උදාරා ට්‍රේඩ් සෙන්ටර්

# UDARA TRADE CENTRE

## තෑගි භාණ්ඩ, පාසල් උපකරණ, සෙල්ලම් බඩු,
## සුවඳ විලවුන්, විදුලි උපකරණ,
## අට පිරිකර සහ සියළුම පූජා භාණ්ඩ










**අංක. 76, මාතලේ පාර, රත්තොට.**
**දු.ක. 066 2255349 / 077 6979122**
**077 2908059, 077 4917736**

ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக
நடந்தேற எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம்...



திரு. தியாகராஜா குடும்பம்

இல. 150/3, பீரிதவளை,
அலுவிஹாரை, மாத்தளை.

**ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்**
**மஹாகும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக**
**இனிதே நடந்தேற வாழ்த்துகின்றேன்.**



திரு. சத்தியானந்தன் K.P

*With best compliments from.*

# නිහාල් ස්ටෝර්ස්

## තොග සහ සිල්ලර වෙළෙන්දෝ

# Nihal Stores



Shop :
No. 01, Jayarathna Mawatha, Rattota.
Tel : 066 22 55 408
Res : Nikkawela Road, Rattota.
Tel : 066 22 55 417

*With best compliments from.*

# ප්‍රවීන් එන්ටර්ප්‍රයිසස්



★ අනුදි නිවාස සැලසුම්, ඇස්තමේන්තු හා ඉදිකිරීම් කොන්ත්‍රාත්
★ මිළදී ගැනීම් හා විකිනීම්
★ සියළුම වර්ගවල වාහන (ජපන්, කොරියන්, ඉන්දියන්)
★ සියළුම නිවාස සහ ඉඩම් මිලදී ගැනීම
★ ජනුදි කුලී රථ සේවය



Chandana Thalgaswatte
Proprietor

077 60 71 381
066 56 84 320

மஹா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற
ஸ்ரீ செல்வ விநாயகரின் திருவருளை வேண்டுகின்றோம்.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
தலைநகரில் தலைசிறந்த நகையகம்

# புஷ்பா ஜுவலர்ஸ்



உங்கள் எண்ணம் போல அழகிய டிசைன்களில்
அசல் 22 கரட் தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

32, காலி வீதி, தெஹிவளை.
தொ. பே. 0112 71 91 95

ஸ்ரீ செல்வ விநாயகரின் நல்லருள் இப்புனித நாளில்
அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்.

# Dishney

# டிஷ்னி



**Specialist in Fancy Goods, Covering & Gift Items.**

**No. 23/B, Nicholoya Road, Rattota.**

**Tel : 077 44 66 100**

ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்
மஹா கும்பாபிஷேகம் சிறப்புற
எமது வாழ்த்துக்கள்...

# New FOOD CORNER

**Take away service**

சைவ, அசைவ உணவு வகைகளை
சுவையாகவும், சுடச்சுடவும்
பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்...


# நிவ் fபுட் கோனர்




No. 74, Trincomalee Street,
Mandandawela, Matale.
Tel : 077 63 24 197

# Max Internet Café Rattota

- Skype Call,
- Net Browsing,
- Games,
- Computer Formatting,
- Computer Repairing,
- Computer Class
- Video Editing
- Photo Editing



Email: kannanravinath@yahoo.com Skype: ravinath1231
No. 09, Main Street, Rattota.

# SRI JEYA METALS

பழைய இரும்பு, தகடு, காட்போட், பேப்பர், அலுமினியம், பித்தளை, செம்பு, பெட்டரி, போத்தல், பிளாஸ்டிக் ஆகியவை தகுந்த விலைக்கு எடுக்கப்படும்.

உருப்படி சாமான்கள் விற்கப்படும்.

No. 144/01, Matale Road, Rattota.
Tel: 077 6073395

*With best compliments from:*

இரத்தோட்டை ஸ்ரீ செல்வ விநாயகர்

திருக்கோயில்

மஹா கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

# Rainwear Apparel (Pvt) Ltd

**Manufacturers Suppliers and Dealers of all Kind of Garments**

Tel : 057 2232657
057 2232657
Mob : 0777 371752
Email: rainwear@sltnet.lk

Badulla Road,
Bindunuwewa,
Bandarawela.

*With best compliments from:*

**இரத்தோட்டை**
**ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்**
**மஹா கும்பாபிஷேக விழா சிறப்புற**
**வாழ்த்துகின்றோம்**

# TASTY FOODS DISTRIBUTORS

**For Your all Catering Items**

**No. 115, Quarry Road,**
**Dehiwala.**
**Tel:0777 635135, 2737111**

கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகிறோம்....

# Santhyas's
# சந்தியாஸ்

**WHOLESALE & RETAIL DEALERS IN**
**VEGETABLES, POTATOES.**

**Santhiyarajan - Proprietor**

No. D8, Dedicated Econamic Centre,
Nuwara eliya.
Tel : 052 222 32 03, 052 22 34 989,
072 280 90 70

*With Best Compliments From :*

# HAWK

## HELMET CO. (PVT) LTD.

**Chinthaka Sanjeewa Ganegoda**
**Proprietor**

No. 53/27, 3rd Lane, Cemeter Road,
Thalapathpitiya, Nugegoda.

Tel : 0115 512436, 0112 835136
Fax : 0115 550961 Mobile : 077 3029207

E-mail : hawkhelmet@yahoo.com

*With Best Compliments From :*

# LANKA BRASS

Importers & Dealers In Ferrous,
Non Ferrous Metal &
Foundry Items.

No. 46, Quarry Road, Colombo 12,
Sri Lanka.

Tel : 011 24 58 238
011 23 89 782
Telefax : 011 25 43 260
Mobile : 077 38 74 848

E-mail : lankabrass_sl@hotmail.com

நாடு நலம் பெற ஸ்ரீ செல்வ விநாயகரின்
திருவருள் கிட்டட்டும்

# R.K.S.
## Jewellery

**Genuine 22kt Gold Jewellery**







No. 189/1/2, Sea Street, Colombo 11.
Tel : 011 2338700
Mob : 077 3550753
E-mail : kiruparks@yahoo.com

*With Best Compliments From:*

# MARIY'S

**Import and local Seed Potatoes Distributor**

**No. 2 ST. Andrew's Drive,**
**Nuwara Eliya.**
**Tel : 052 22 34 941**

*With Best Compliments from :*

# MOHAN PROJECTS (PVT) LTD.

## Core Business Area

### Trenchless Technologies

**Pipe Technologies**

- **Pipe Installation**
  - Tunneling
  - Pipe Jacking
  - Micro tunneling
  - Pipe bursting
  - Directional Driling
  - Auger Boring
  - Guided Boring
  - Pipe Ramming
- **Pipe Renewal**
  - Coating
    - CIP Concrete
    - Shotcrete
    - Spray-Applied System
  - Linings
    - Continuous Pipe Sliplining
    - Segmental Pipe Sliplining
    - Cured-in Place Pipe
    - Fold & Form Pipe
    - Tight Fitting Liners
    - Spiral Wound Pipe
    - Segmental Linings
- **Pipe Repair**
  - Internal Grouting
  - External Grouting
  - Mechanical Sealing
  - Robotic Repairs
  - Point Repairs

### TECHNOLOGICAL BENEFITS

- Less excavating & trenching
- Environment friendly
- Increased productivity
- Optimization of time
- Less surface footprint
- Enhanced safety
- Reduces potential settlement damage
- More cost - effective

No. 72, Lauries Road, Colombo 4
Mob : 077 160 63 55
E-mail : mahesh2059@hotmil.com

## ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால வேலைத்திட்டங்கள்

✱ ஆலயம் முழுவதும் தரையோடுகள் பதித்தல்

✱ ஆலயத்தைச் சுற்றி பாதுகாப்பு மதில் அமைத்தல்

✱ குருக்கள் விடுதியைப் புனரமைத்தல்

✱ சிறுவர் பாடசாலை கட்டடம், சிறுவர் விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டு புதிதாக சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல்

✱ ஆலய வளவுக்குள் வாசிகசாலை ஒன்றினை நிறுவுதல்

✱ இந்து கலாசார, கல்வி முன்னேற்றத்திற்கான மன்றம் ஒன்றினை அமைத்தல்.

✱ காலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட (மேல் மாடி) வேலையைப் பூர்த்தி செய்தல்

✱ காலாசார மண்டபத்திற்கான புதிய பாதை ஒன்றை அமைத்தல்

✱ ஆலய வளவிற்குள் மூன்று மாடி கடைக்கட்டடம் ஒன்றினை அமைத்தல்

✱ வருடாந்த திருவிழாவின் போது தீர்த்த உற்சவத்திற்கு சுவாமி செல்வதற்கு சகடை ஒன்றை அமைத்தல்

✱ இந்துக்களுக்கான இந்து மயானம் ஒன்றை அமைத்தல்

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகிறோம்....

# சரண்யா ஜுவலர்ஸ்





சுத்தமான தங்கத்தில்
அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
தலைநகரில் தனித்துவமான
நகைமாளிகை

இல. 66 A1, காலி வீதி, தெகிவளை.
தொ.பே. 0112 732 636

# மலர் மொட்டு விரிப்பதில் ..

இரத்தோட்டை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் "ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி பெருவிழா" சிறப்பு மலா் ஒன்றினை வெளியிடுவதில் நிர்வாக சபை சார்பில் பெருமகிழ்ச்சிக் கொள்கின்றோம்.

1972ம் ஆண்டுக்குப் பின் ஆலயத்தினால் மொட்டு விரித்து மணம் பரப்பும் மூன்றாவது மலர் இதுவாகும். இம்மலரின் இதழ்களில் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆலய வரலாறு, ஆலயத்தின் திருப்பணிகள், ஆரம்ப காலந் தொடக்கம் இவ்வாலயத்தை நிர்வகித்த தலைவர்கள் பற்றிய விபரங்கள், ஆலயத்தின் பழைமையை விளக்கி நிற்கும் "கரணவாய் ஆரிய திராவிட பண்டிதர் வியாக்கரண சிரோன்மணி சிவஸ்ரீ த. காசிநாத குருக்கள்" அவர்களின் "ஸ்ரீ செல்வ விநாயகர் திருவூஞ்சற் "பதிகம்" மற்றும் "ஆசிரிய விருத்தம்" என்பனவும் மணம் வீசுகின்றன.

அத்தோடு மலரின் சிறப்புக் கருதி, மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ள கட்டுரைகளுக்கான மூலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மலரினை சிறப்பாக வெளியிட்டு வைப்பதில் ஆசிச் செய்திகள் வழங்கிய பெரியார்களுக்கும், நிறுவனங்களின் தலைவர்களுக்கும், மத்திய மாகாண இந்து கலாசார தமிழ் கல்வி அமைச்சர் அவர்களுக்கும், கட்டுரைகளுக்கான தகவல்களை தந்து உதவியவர்களுக்கும், புகைப்படங்கள் வழங்கியவர்களுக்கும், மற்றும் நிதியுதவி செய்து விளம்பரங்கள் தந்து உதவிய கொடையாளர்களுக்கும், மலரினை மிகவும் சிறப்பான முறையில் அச்சுப் பதிப்பு செய்து தந்த "ரோயல் டிரேடிங் கம்பனி கொழும்பு" உரிமையாளர் திரு. S. வசந்தராஜா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய புனரமைப்புடன் புதிய நிர்மாண பணிகள், சிலை வார்ப்புக்கள் மற்றும் அலங்கார வேலைகளை செய்து முடித்தும், கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவை சிறப்புற செய்து முடிக்க நிதி மற்றும் பொருளுதவிகள் செய்த அடியார்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் பெருஞ்சாந்தி பெருவிழா கிரியைகளை நிறைவுசெய்வதில் பிரதிஷ்டா பிரதம குரு ஆகமப் பிரவீணர், சிவாச்சாரியமணி வேதாகம ஞானஜோதி கு.குகேஸ்வரக் குருக்கள் (ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - நீர்கொழும்பு) அவர்களின் தலைமையில் நடாத்திய சிவாச்சாரியார்கள், குருமார்கள் மற்றும் ஆலய கௌரவ தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அனைத்து உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியுணர்வை இம்மலரினூடாக பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும், இறத்தோட்டையைப் பூர்வீகமாகக் கொண்டு கொழும்பு மற்றும், பிற இடங்களில் வாழ்ந்து வருகின்ற, மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கின்ற இந்து அபிமானிகளின் தொடர்புகளை ஏற்படுத்தி கொடுத்த நல்லுள்ளங்களுக்கும், ஆலோசனை வழிகாட்டல் வழங்கிய பெரியார்கள் மற்றும் சகோதரர்கள், அத்தோடு ஆலய மூலஸ்தானம், இரட்டை பஞ்சாங்க வேலைகளோடு 27 அடி உயரமான விமானம், மகத்தான வில் மண்டபம் மற்றும் பரிவாரக் கோயில்கள், வசந்த மண்டபம், மணி மண்டபம், பொம்மை வேலைகள் அனைத்துக்குமான சிற்ப வேலைகளை உயிரோட்டமாக ஆக்கித் தந்த இந்தியா தொண்டி, தமிழ்நாடு திரு. கருப்பையா, சிற்பாசாரியார் குழுவினர்களுக்கும், வர்ண வேலைகளை கலை மணம் பரப்பும் வகையில் தத்ரூபமாக ஆக்கித் தந்த வர்ண வேலையாளர் (அனவாச நல்லூர், பில்லாலி நாகை. தமிழ்நாடு) திரு. P. நாராயணசாமி குழுவினருக்கும் மனம் திறந்து நன்றி கூறுவதில் திருக்கோயில் பரிபாலன சபையினர் அகம் மகிழ்கின்றோம்.


இவ்வாலயத்தின் முன்னாள் கௌரவ தலைவர்களாக, சமயப் பணியும் சமூகப் பணியும் புரிந்த கௌரவ தலைவர்கள் எமது அன்பான அழைப்பினை ஏற்று உள்நாட்டிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வருகைத் தந்து இப்பெருஞ் சாந்தி விழாவில் கலந்து சிறப்பித்ததற்கும், திருக்கோயில் பரிபாலன சபை மனமார்ந்த நன்றிகளை


இம்மலரினூடாக மணம் பரப்பச் செய்கின்றது.

ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா இனிதே நிறைவு பெற தொண்டாற்றிய சகல அன்பர்களுக்கும், அடியார்களுக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர், திருவருள் தந்தருள வேண்டுமென உளமார பிரார்த்தித்து, திருக்கோயில் பரிபாலன சபை சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் மலர் வெளியீட்டுக் குழு மனநிறைவு அடைகிறது.

சமூகப் பணிகளில் ஒன்றான சமயப்பணி மூலம் நிறைவான ஓர் அம்சம் நிறைவேற்றப்பட்டுள்ளமை திருக்கோயில் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு வருங்கால சந்ததியினருக்குச் சான்று பகர்வதாய் அமையுமென மலர் வெளியீட்டுக் குழு நம்பிக்கைக் கொள்கிறது. அத்தோடு ஒரு வரலாற்று ஆவணமாகப் பேணி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும், அடியார்கள் அனைவருக்கும் சொல்லிச் செல்கின்றது.

மேலும் திருக்கோயில் வரலாற்றில் மலரொன்று மணம் பரப்ப விதை தந்து, வேர்விடச் செய்து, களை பிடுங்கி அருள் பாலித்து, விருட்சமாக்கிய எம்பெருமானின் அருட்கடாட்சம் என்றும், மகிமை பொருந்திய போற்றுதலுக்குரிய ஒன்றாக திருக்கோயில் வரலாற்றில் இடம்பெறும். இவ்வனைத்திற்கும் காரண காரியமாய் விளங்கிய எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் அருள் என்றைக்கும் நிலைத்திருக்க அவன் பாதங்களுக்கே இம் மலரை படையலாய் சமர்ப்பணம் செய்கின்றோம்.





**மலர் வெளியீட்டுக் குழு :-**

**திரு. சாமிக்கண்ணு நேசநாதன் (பொருளாளர்)**

**திரு. சிதம்பரம் ராஜ்குமார் (உப செயலாளர்)**

**திரு. நல்லையா சந்திரசேகரன் (உறுப்பினர்)**

**(திருக்கோயில் நிர்வாக குழு சார்பாக.)**

*With best compliments from:*

**BANK OF CEYLON**

**BOC**

ලංකා බැංකුව இலங்கைவங்கி

# உங்கள் பிள்ளையின் மூலம் உயர் கல்விக்கான நிதி அடித்தளம்

"ரண் கெகுளு" கணக்கின் மூலம்
உங்கள் பிள்ளையின் உயர்
கல்விக்கான நிதி அத்திவாரத்தை கட்டியெழுப்புங்கள்.
இக்கணக்கு பாதுகாவலருக்கான
இலவச ஆயுட் காப்புறுதி,
பிள்ளைக்கான விபத்து மற்றும் சுகயீனக் காப்பீடு,
5ஆம் ஆண்டு மற்றும்
பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கான
புலமைப் பரிசில்கள் போன்ற
பல தனித்துவமான நன்மைகளையும்
கொண்டுள்ளது.

# RTC Royal Trading Co

**Paper Merchants & Stationers,
Specialist in
Wedding Cards, Cake Boxes Etc.**



**Office:**
81-1/24B, Ashika Building,
Prince Street,
Colombo -11.
Fax: 2436541

**Show Room:**
No. 70,
Maliban Street
Colombo -11.
Tel: 2472975.